
# தமிழ்மணி
# அன்புமணி
# இரா. நாகலிங்கம்
# பாராட்டு விழா மலர்



40 வருட இலக்கியப் பணியுடன், "தமிழ்மணி" விருதுபெறும்

'அன்புமணி'க்கு

ஆரையம்பதி மக்கள் செலுத்தும் அன்புக் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மணி இரா. நாகலிங்கம்

(அன்புமணி)

அவர்களின்

# பாராட்டு விழா மலர்



வெளியீடு:

ஆரையம்பதி பொது மக்கள்

1992 கார்த்திகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வாழ்த்துச் செய்தி: — சுவாமி ஜீவனானந்த | — | 01 |
| 2. | வாழ்த்துச் செய்தி: — மகாவித்துவான் F. X. C. நடராசா | — | 03 |
| 3. | விழாக் குழுத் தலைவரின் செய்தி: — சி. வாமதேவன், உதவிக் கல்விப் பணிப்பாளர். | — | 04 |
| 4. | மலர் வெளியீட்டுக் குழுத் தலைவரின் செய்தி: — ஆர். துரைராசசிங்கம், கொத்தணி அதிபர். | — | 05 |
| 5. | விழாக் குழுச் செயலாளரின் செய்தி: — கலைமணி மு. கணபதிப்பிள்ளை, ஓய்வுபெற்ற அதிபர். | — | 06 |
| 6. | விழாக் குழுப் பொருளாளரின் செய்தி: — க. சொக்கலிங்கம், கிராம சேவை உத்தியோகத்தர். | — | 08 |
| 7. | வாழ்த்துப் பா: — இலக்கியமணி நல். அழகேசமுதலியார், ஜே. பி. | — | 09 |
| 8. | அன்புமணியாற்றும் பணி: — த. மோகனராஜா | — | 12 |
| 9. | ஞானச்சுடர் பரவத் தமிழ்மணி வாழ்க நீடு! "இறையடியான்" | — | 14 |
| 10. | இசை பாட வாருங்கடி! — ஆரையூர் அருள் | — | 15 |
| 11. | உத்தமனே! தமிழ்மணி ஆனாய்: — ஆ. தங்கராசா | — | 17 |
| 12. | அன்புமணி தருமோசை தமிழின் பூசை: — கலைமணி மூனாக்கானா | — | 18 |
| 13. | தமிழ் மணியான அன்புமணி: — க. தங்கேஸ்வரி, B A. (Hons.) | — | 20 |
| 14. | திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி): — செ. குணரத்தினம் | — | 24 |
| 15. | தமிழ்மணியாகிய அன்புமணி: — சி. க. பொன்னம்பலம் | — | 27 |
| 16. | ஓர் இலக்கியச் சந்திப்பு: — மலர்வேந்தன் | — | 28 |
| 17. | வாழ்க! நீ எம்மான் நீடு! — தமிழ்மணி சிவ. விவேகானந்தமுதலியார் | — | 36 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன் தலைவர்

## ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

திருமுருகனுக்குச் சிறப்புற வழிபாடாற்றி, பண்பும் பயனுமுற வாழ்ந்துவரும் ஆரையம்பதிச் சைவப் பழங்குடி மக்களின் நல்லதொரு பிரதிநிதியாகக் கொள்ளத்தக்க வகையில், திருவருளும், குருவருளும் ஒருங்கே பெற்று நம்மிடையே வாழ்ந்துவருபவர் "அன்புமணி"யென அறிந்தோரால் போற்றப் பெறும் திரு. இரா. நாகலிங்கம் அவர்கள்.

இவர் பார்வைக்கு எளியவர்; பழகுதற்கு இனியவர்; பண்பு, அடக்கம், அன்புடைமை பேணுவதில் மிக உயர்ந்தவர். கல்வித் திணைக்களத்தில் சாதாரண எழுதுவினைஞராகத் தனது வாழ்க்கையினை ஆரம்பித்த இவர் தொழிலில் படிப்படியாக ஏறி இலங்கை நிருவாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த தன்மூலம் களுவாஞ்சிக்குடிப் பிரிவின் உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்று, பின்பு மட்டக்களப்புக் கச்சேரியில் தலைமையக, உதவி அரசாங்க அதிபராக உயர்ந்து, தற்போது வட-கிழக்கு மாகாண ஆளுநரின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இத்தனை உயர்ச்சிகளும் அவர் தமது விடாமுயற்சி, தகுதி, தொழிலிற் காட்டும் குன்றாத ஈடுபாடு, மக்கள் துயர்துடைக்கும் பணிகளின்மூலம் மக்களிடையே பெற்ற அபிமானம் என்பவைமூலம் நல்லமுறையில் ஈட்டிக்கொண்ட தேட்டங்களேயன்றி வேறல்ல. ஸ்ரீ இராமக்கிருஷ்ண தேவர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் போதனைகளுக்கேற்ப தனது வாழ்க்கையினை அமைத்துக் கொள்ளவேண்டுமென்ற பேராவல் உடையவர். ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன், மட்டக்களப்புக் கிளை மேற்கொண்டுள்ள சமய, சமூக, கலாச்சாரப் பணிகளுக்கு வரையறையற்ற ஒத்துழைப்பினை அவர் அளிக்க என்றும் தயங்கியதேயில்லை. தனது உதவியை நாடியவர்களுக்குத் தங்குதடையின்றி உதவும் பெரும் மனம் படைத்தவர். நலிந்தோருக்காக இரங்கும் நல்ல மனம் படைத்த திரு நாகலிங்கத்துக்கு வருங்காலத்திலும் பல சிறப்புகள், உயர்ச்சிகள் வந்துசேரும் என்பதில் ஐயமில்லை. இவருக்குக் கிடைக்கும் உயர்ச்சி, கௌரவம் என்பன பொதுப் பணிகளில் தொடர்புடைய அனைவருக்கும் மனநிறைவு தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மட்டக்களப்பின் கலை, சமூக, ஆத்மீக முயற்சிகள் யாவற்றிலும் தம்மைப் பிணைத்துக்கொள்ளும் இயல்பினராய் தம்மாலியன்ற பங்களிப்பை மனமார நல்கிவருகிறார் என்பதை யாவருமறிவர். வருடா வருடம் நகரில் நடைபெறும் கலாசார வைபவங்கள், இலக்கிய ஆர்வலரின் சந்திப்புகள், சொற்பொழிவுகள், இலக்கிய வெளியீடுகள்பற்றிய ஆய்வுக் கருத்தரங்குகள் என்பன அவருடைய உள்ளம் இத்துறைகளிற் கொண்டுள்ள ஈடுபாட்டுக்குச் சான்று பகர்வன. அவர் தமிழுக்கும், தமிழர் கலாச்சாரத்திற்கும் ஆற்றிய சேவையினைப் போற்றும்முகமாக தமிழ் சாகித்திய மண்டலம், ''தமிழ் மணி'' எனும் பட்டத்தினை அளித்து திரு. இரா. நாகலிங்கத்தினைக் கௌரவித்தது போற்றுதற்குரியது.

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு''

என்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப, இன்று ஆரையம்பதி மக்கள் அவருக்கு அளிக்கும் கௌரவம் சாலவும் பொருத்தமானதே. அவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து, வளர்ந்து பயனுறவேண்டும்; மக்கள் நலனுக்காக உழைக்கும் அவருக்குச் சகல ஐசுவர்யங்களும் கிடைக்கவேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,

சுவாமி ஜீவனானந்த.

ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன்,
இராமக்கிருஷ்ணபுரம்,
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் முதறிஞர், மகாவித்துவான், கலாசூரி

**F. X. C. நடராசா**

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

ஆங்கிலத்திலே அச்சேற்றப்பட்டனவெல்லாம லிற்றரேஜர் (Literature) எனப்படும். கிளாசிக்ஸ் (Classics) எனப்படும் இலக்கியங்களே எமக்குத் தேவை. தொண்ணூற்றாறு வகையான பிரபந்தங்களுள் இலக்கியமும் அடங்கும். பிரபந்தம் என்ற பதம் அரங்கேற்றுகாதையில் உரையில் வருகின்றது - அது வேறு; அடிவரையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது - காவியம் வேறு.

பல ஆண்டுகளாகத் தெரியும். நல்ல முயற்சியால் முன்னேறியவர். சிறுகதை, பெருங்கதை எனும் வாயிலாக விருத்தியடைந்தவர். சஞ்சிகை எனும் - மலர் - மாதாந்த மலர் வெளியிட்டால் அன்புமணி என்று பலர் புகழ் ஞாயிறுபோற்றிகழ்ந்தவர். மாதந்த சஞ்சிகையைத் தன் முயற்சியால் வெளியிட்டவர். அச்சுக்கூடம், சஞ்சிகை விடயதானம் போன்ற விடயங்களையிட்டுச் சஞ்சலமுற்றவர்.

எனினும் விடாமுயற்சியால் முன்னேறியவர் என்க. எழுதுவினைஞர் பதவிக்கு வந்தார் - விடாமுயற்சியால் எடுத்த கருமம் தொடுத்து முடித்து விடும் ஆற்றல்மிகுந்தவர். மெல்ல மெல்ல உயர்ந்தவர். எழுதுவினைஞர் பதவி, ஒரு பகுதிக்குத் தலைமை எழுதுவினைஞர் பதவி, முழுவதற்குப் பொறுப்பு உத்தியோகம். ஆட்சிப் பொறுப்புச் சேவையிற் சித்தியடைந்தானபடியால் களுவாஞ்சிக்குடிப் பகுதிக்கு உதவி அரசாங்க அதிபராகக் கடமைபுரிந்தார். அரசாங்க மாகாண அதிபரான காலஞ்சென்ற அந்தோனி முத்து அவர்கள் சொன்னார்கள்: ''இரா. நாகலிங்கம்போன்ற வல்லுநர் உதவி அரசாங்க அதிபராகக் கடமைபுரிந்தால் மாகாண அதிபருக்குக் கவலையில்லை''. உடனே கச்சேரிக்கு மாற்றலாகித் தலைமையக உதவி அரசாங்க அதிபரானவர்.

இப்போது இப்பதவியிலிருந்து மேலும் பதவி உயர்வு பெற்று வட-கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றுகிறார். இல்வாறு வேலைப் பளு கூடிய உயர்ந்த பதவியிலிருந்தாலும், எழுத்துத் துறையிலும் சலியாமல் தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருக்கும் இவரது தமிழ்ப்பணியைக் கௌரவிக்குமுகமாக அரசாங்கம் இவருக்கு 'தமிழ்மணி' என்னும் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது. இதனைப் பாராட்டுமுகமாக அவரது சொந்த ஊரான ஆரையம்பதி மக்களும் விழாவெடுத்து மலர் வெளியிடுவது ஒரு நல்ல செயலாகும்.

இவரது தமிழ்பணியும், அரசபணியும் மேலும் வளரவேண்டுமென்றும், பட்டங்களும் பதவிகளும் பெருகவேண்டுமென்றும், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று நீடுழி காலம் வாழவேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

வித்துவான் **F. X. C. நடராசா**

*127, மத்திய வீதி,*
*மட்டக்களப்பு.*
*06-11-92.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டு விழாக் குழுத் தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான

## திரு. சி. வாமதேவன்

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவரின் இரு அன்புக் கட்டளைகளிலே முதலாவது கட்டளையை ஏற்று, கடமையிலும் சேவையிலும் பெரும் புகழோடு, நம் கண்முன்னே வாழ்ந்துகொண்டிருப்பவர் திரு. இரா. நாகலிங்கம் ('அன்புமணி') அவர்கள். வாழும் எழுத்தாளர்களுக்குள்ளே, நமது தமிழ்மொழியின் வளங்களையெல்லாம் கல்மேல் எழுத்துப்போல் நிலைத்துநிற்கச் செய்யும் சிற்பி. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, விமர்சனம் எதுவானாலும் இவரது கையிலுள்ள பேனை பல திசைகளிலும் சுழன்றுகொண்டேயிருக்கிறது. புதுமையையும், பழமையையும் இரு கரங்களிலும் அணைத்துக்கொண்ட அன்பன். சுமார் நாற்பது வருடங்களாக எழுதிக்கொண்டேயிருக்கும் மார்க்கண்டேயர். திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் ஆரையம்பதி மண்ணின் மைந்தனாக இருந்தாலும், இன்று தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதற்குமே சொந்தமாகிவிட்டார். இவரது தமிழ்ப்பணியை உலகம் எப்பவோ கௌரவித்துவிட்டபோதிலும், அரசாங்கம் 1992ல்தான் 'தமிழ்மணி' என்ற பட்டமளித்துக் கௌரவித்துள்ளது. ஆரையம்பதி மக்களாகிய நாம் மிகவும் பெருமைப்படுகிறோம் - பாராட்டுகிறோம்.

திரு. இரா. நாகலிங்கம் அவர்களை நாம் இன்னுமொரு சாதனைக்காகப் பாராட்டவேண்டியவர்களாக இருக்கின்றோம். மட்டக்களப்புக் கல்வித் திணைக்களத்திலே ஒரு சாதாரண எழுதுவினைஞராகச் சேர்ந்து, இன்று வட-கிழக்கு மாகாண ஆளுனரின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக உயர்ந்த பதவியை அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட சாதனைகளைப் புரிந்து எங்களுக்கும் பெருமை தேடித்தந்த திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து இன்னும் பல சாதனைகளைப் புரியவேண்டுமென இந்த விழாக் குழுவின் தலைவர் என்ற வகையில் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன.

இப்படிக்கு,

சி. வாமதேவன்
தலைவர், விழாக் குழு.

92-10-06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வெளியீட்டுக் குழுத் தலைவரும், ஆரையம்பதி கொத்தணி அதிபருமான

## திரு. ஆர். துரைராசசிங்கம்

அவர்கள் வழங்கிய

# பாராட்டுச் செய்தி

மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ''அன்புமணி'' என்ற புனை பெயரைத் தாங்கியவருமான பிரபல எழுத்தாளர் திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் சுமார் நாற்பது வருடங்களாகத் தொடர்ந்து பல சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கவிதைகளை எழுதித் தமிழ்த் தாய்க்கு அணிசெய்துள்ளார். இவரது ''ஒரு தந்தையின் கதை'' என்ற நாவல், ''இல்லத்தரசி'' என்ற சிறுகதைத் தொகுதி, ''திரைகடல் தீபம்'' என்னும் நாடகம் என்பன சிறந்த ஆக்கங்களாகும். ''திரைகடல் தீபம்'' என்னும் நாடகம் சாகித்தியமண்டலப் பரிசினை ஈட்டித் தந்தது. மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்துக்குப் பல வருடங்களாகச் செயலாளராக இருந்து செயல்புரிந்த ''அன்புமணி'' அவர்கள், மற்றையோரையும் எழுத்துப்பணியில் ஊக்குவிக்கும் உயர்ந்த குணம் கொண்டவர். ஆழ்ந்த சமயப்பற்று உடையவர். காட்சிக்கு எளியராய், கடும் சொல் அற்றவராய் கஷ்டமான இந்தக் காலகட்டத்திலும் புறச் சூழ்நிலையால் தனது அகம் பாதிக்கப்படாத நிலையில் அமைதியாக இருந்துகொண்டு உயரிய ஆக்கங்களைச் செய்துகொண்டுவருவது அவரது நெஞ்சுரத்தைக் காட்டி நிற்கின்றது.

சாதாரண எழுதுவினைஞராகச் சேவைசெய்து தனது மதிநுட்பம், அயரா முயற்சி காரணமாக S.L.A.S. பரீட்சையில் திறமையாகச் சித்தியெய்தி இன்று வட-கிழக்கு மாகாண ஆளுனரின் சிரேஸ்ட உதவிச் செயலாளராகக் கடமைபுரிகின்றார்.

இராமக்கிருஷ்ண சங்கத்தோடும் நெருங்கிய தொடர்புகொண்ட அன்புமணியவர்கள், தனது கடமையின் மத்தியிலும் இலக்கியம், சமயம், சமூகசேவை ஆகிய தொண்டுகளிலும் பணியாற்றிவருகின்றார். இவரது தமிழ்ப் பணியைக் கௌரவித்து அரசாங்கம் 'தமிழ்மணி' என்னும் பட்டத்தை அளித்துள்ளது. இதனால் ஆரையம்பதி மக்களாகிய நாம் பெருமையடைவதோடு மட்டும் நில்லாமல் பாராட்டு விழாவும், அதிலே சிறப்பு மலரும் வெளியிடத் தீர்மானித்தோம். இந்த மலர் வெளியீட்டுக் குழுவின் தலைவர் என்ற வகையில் திரு. இரா. நாகலிங்கம் அவர்களின் பணி மேலும் தொடரவேண்டும், நீடுழி வாழவேண்டும் என வாழ்த்துவதோடு, இவருக்கு விழாவெடுக்க முன்வந்த ஆரையம்பதி மக்களின் அபிமான உணர்ச்சியையும் நான் பாராட்டுகின்றேன்.

ஆர். துரைராசசிங்கம்
தலைவர், மலர் வெளியீட்டுக் குழு.

ஆரையம்பதி.
6-10-92.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக் குழுச் செயலாளர்

# கலைமணி மு. கணபதிப்பிள்ளை

அவர்கள் வழங்கிய

## செய்தி

---

கிராமியக் கலைகளின் பிறப்பிடமும், சிறப்பிடமுமான மட்டக்களப்பு மானிலத்திலிருந்து பல எழுத்தாளர்கள் எழுதினார்கள். இவர்களிற் சிலர் சோர்ந்தனர். சிலர் ஒதுங்கினர். சிலர் சூறாவளிக்குத் தாக்குப்பிடித்த மரம்போல நிமிர்ந்துநின்று இப்பொழுதும் எழுதிக்கொண்டேயிருக்கின்றனர். இந்தச் சிலரில் ஒருவர்தான் எங்கள் அன்புமணி திரு. இரா. நாகலிங்கம் அவர்கள். பல கிளைகள் வீசிப் பரந்துநிற்கும் விருட்சம்போல நமது அன்புமணி அவர்கள் மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளராக, ''மலர்'' மாத சஞ்சிகையின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றியதோடு, தொடர்ந்தும் கதை, கட்டுரை, நாவல், கவிதை, நாடகம், விமர்சனம், புத்தக வெளியீடு, கருத்தரங்கு என்று பல துறைகளிலும் அவரது எழுதுகோல் சுமார் நாற்பது வருடங்களாகச் சுழன்றுகொண்டிருக்கிறது.

இவரது தந்தை அமரர் வைரமுத்து இராசையா அவர்களும் ஓர் சிறந்த நாடகத் தயாரிப்பாளரும், நடிகரும், கலைஞருமாவார். தந்தையின் கலைப் பணியினைத் தொடரும் தனையனாகக் கலைப்பணியிலும், தமிழ்ப்பணியிலும் சிறந்து விளங்குகின்றார் அன்புமணி அவர்கள்.

இலங்கை அரசாங்கம் இவரது தமிழ்ப் பற்றையும், எழுத்தாற்றலையும் மதித்து வரவேற்று ''தமிழ்மணி'' பட்டமளித்துக் கௌரவித்தது ஒரு நல்ல அறிகுறியாகும். ஆரையம்பதி மண்ணின் மைந்தனான திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் எங்கள் ஊருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் தேடித்தந்த இந்தப் பெருமைகளுக்காக அன்னாரை நன்றியுணர்வுடன் ஆரையம்பதி மக்கள் பாராட்ட முன்வந்திருப்பது மூன்றாவது தடவையாகும். ''திரைகடல் தீபம்'' என்னும் இவரது நாடகத்திற்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தபோதும், இலங்கை நிருவாக சேவைப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்து உதவி அரசாங்க அதிபராகப் பதவி பெற்றபோதும் இவர் பாராட்டப்பெற்றுள்ளார். இந்த விழாவிலே இவரது சேவைகளைப் பாரட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடப்படுவது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இன்னும் பல சாதனைகள் புரிந்து பல பாரட்டு விழாக்களின் கதாநாயகனாக வரவேண்டும். நீடூழி காலம் வாழ வேண்டும். இதுவே ஆரையம்பதி மக்களின் பேராசை. இதை இறைவன் நிறைவேற்றி வைப்பானென்ற நம்பிக்கை எங்களுக் குண்டு.

மக்களின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ள இக்காலகட்டத்திலும்கூட இவ்விழா சிறப்புற அமைவதற்கு நிதி உதவியையும், ஏனைய உதவிகளையும் தந்துதவிய அன்பர்கள் அனைவருக்கும், இங்கு அமைந்துள்ள பாடசாலைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அபிவிருத்திச் சபை உப அலுவலகம் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களுக்கும், மலருக்கு விடயதானமளித்த அறிஞர்களுக்கும், பாரட்டுரை வழங்கிய பெரியோர்களுக்கும், மலரைச் சிறப்பாக அச்சேற்றித் தந்த மட்டக்களப்பு சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தாருக்கும், விளம்பரங்கள் தந்துதவிய தாபனங்களுக்கும், ஏனைய சகல துறைகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் விழாக் குழுவின் செயலாளர் என்ற வகையில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

கலைமணி மு. கணபதிப்பிள்ளை,
செயலாளர், விழாக் குழு.

ஆரையம்பதி.
92-10-24.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக் குழுப் பொருளாளரும், கிராம சேவை அலுவலகருமான

## திரு. க. சொக்கலிங்கம்

அவர்கள் வழங்கிய

# செய்தி

---

மட்டுநகர் மண்மாதா பெற்றெடுத்த தவப்புதல்வர்களிலே, ஏறக்குறைய நாற்பது வருட காலம் எழுத்துத் துறையிலே ஒளி விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள் ஒரு தலைசிறந்த எழுத்தாளராவார். ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் அகிலத்துக்கே சொந்தமான இவர், தற்பொழுது வட-கிழக்கு மாகாண ஆளுனரின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக உயர்ந்த பதவியை அலங்கரிப்பது, ஆரையம்பதி மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கே பெருமை தரும் விடயமாகும்.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட திரு. நாகலிங்கம் அவர்கள், எழுத்துத் துறையிலே பல சாதனைகளைப் படைத்தவர். அன்புமணி, அன்பு, மணி எனப் பல புனைப் பெயர்களுக்குள்ளே புகுந்திருந்து, சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, நடிப்பு, விமர்சனம், நூல் வெளியீடு இவைகளின்மூலம் எமது கலை, கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாயிருந்து நமது கிராமத்துக்குப் பெரும் புகளை ஈட்டித் தந்துள்ளார். இவரது ''திரைகடல் தீபம்'' என்னும் நாடகம் சாகித்திய மணடலப் பரிசு பெற்றதை நாம் அறிவோம். இலங்கை அரசாங்கம் இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி 'தமிழ்மணி' என்னும் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது. இதனை முன்னிட்டு நாமும் இவரைப் பாராட்டிக் கௌரவிக்கவேண்டுமென்ற உளமார்ந்த எண்ணத்துடன், பாராட்டு விழாவும், மலர் வெளியீடும் ஒழுங்குசெய்தது மிகமிகப் பொருத்தமானதாகும்.

எனவே, இவ்விழாவானது சிறப்பாக அமைய நல்ல உள்ளத்தோடு பண உதவியையும், ஏனைய உதவிகளையும் செய்த விழாக் குழுவினர்க்கும், உறுப்பினர்களுக்கும், சிறப்பு மலர் வெளியீட்டாளர்களுக்கும், ஆரையம்பதி மக்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

க. சொக்கலிங்கம் (கி. சே அ.)
பொருளாளர், விழாக் குழு.

ஆரையம்பதி.
6-10-92.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்கள்

தமிழ்மணிப் பட்டம் பெற்றதைப் பாராட்டி

இலக்கியமணி ஆரையூர் நல். அழகேசமுதலியார்

சமாதான நீதிபதி அவர்கள்

மனமுவந்து பாடிய

## வாழ்த்துக்கள்

---

**யாழ் நூல் வேந்தன் சுவாமி விபுலானந்தர் துதி.**

ஓதற்கு அரிய தனு வீரராமன்
உரைபணிமேற் கொள்பரதன் பொற்பு மிக்க
பாதுகையைச் சிரசேற்றிக் கொணர்ந்த யோத்தி
பரிமளிக்க ஆட்சிசெய்து காத்தல் போல
மாதவத்தின் குருவான இராமக் கிருஷ்ணர்
மணிமொழியை மேற்கொண்ட யாழ்நூல் வேந்தன்
சீதநெடுங்கடல் கடந்து ஈழமெங்கும்
சிவானந்த மாக்கியதை ஏத்தி வாழ்வாம்.

தன்னையன்பாய் ஈன்றெடுத்து முத்தமிட்டு
தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டி
பொன்னைப்போல் அருமையாய் வளர்த்தெடுத்து
பொக்கிஷமாய்க் கலையனைத்தும் புகட்டிக் காக்கும்
அன்னையாம் ஆரையூரை மனத்திலேத்தி
அரசாங்க உயர்பதவி வகிப்பதோடு
தன்னையே தாய் மொழிக்குத் தத்தமாக்கி
தமிழ்மணிசெய் தக்கபணி நீடு வாழ்க!

சீரான வெண்கமல மாதுறைந்து
தித்திக்கும் சுவைமிக்க இலக்கியங்கள்
ஆராய்வின் கலையமுதப் படையலாக்கி
அழகு தமிழ்ச் சஞ்சிகையின் வாயிலாக
நேராக நம்மக்கள் அறிந்து போற்ற
நெடுநாளாய்ப் புரிந்துவரு சேவை நோக்கி
பேரான அமைச்சு (இரா) நாகலிங்கனார்க்கு
பேறாகத் தமிழ் மணியாம் பட்டமீந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமதில் அடரிருளை நீக்கும் ஞானத்
தீபத்தால் ஐம்புலனை நெறிப்படுத்தி
முத்தமிழின் திறம் நவிலும் புலவர் வாழ்வு
முன்னணியில் திகழ்வதற்கு முயலும் பாங்கில்
நத்திவரும் நண்பருக்கு அறிவு மல்க
நனிசிறந்த படைப்புகளை அவர்க்கு நல்கும்
சக்தியினால் தீயோரை அன்பராக்கும்
தமிழ்மணி செய் தக்கபணி நீடு வாழ்க.

எப்போதும் தமிழ்த்தாய்பால் எழுந்த எண்ணம்
இதயத்தில் கடலாகப் பிரவாகித்து
அப்பாவென் றோது மொரு தந்தையோடு
அதியுயர்ந்த பலநூல்கள் உருவமாக்கி
இப்போது நிலவுமிளஞ் சந்ததிக்கு
இரவிபோல் மனதினொளி பிரகாசித்து
தப்பேதும் புரியாமல் வாழ்வதற்கு
தீயரையும் அன்புநிகர் மணிகளாக்கும்

வான் நிலவும் தாரகைகள்போல எங்கள்
வனப்புமிகு வளம் மிகுந்த ஆரையூரில்
தேனமிர்தம்போற் பொழியும் புலவர் சேர்ந்து
தேமதுரத் தமிழோசை இனிது ஓம்பி
கான்வளரும் பூந்தளிர்போல் பரிமளித்து
கற்றபெரும் பெரியோர் பாராட்டும் வாழ்வில்
தானடையும் பேற்றைப் போற் சிறந்து மல்க
தமிழ்மணி செய் தக்கபணி நீடு வாழ்க.

இங்கு முன்னாள் வாழ்ந்திருந்த புலவர் பல்லோர்
இனியதமிழ்ப் பாக்களினால் யாத்த நூல்கள்
மங்கி அழிந்தொழிதல் கண்டுமனம் பொறாது
மாபெரிய தேசமாம் கனடா தன்னில்
துங்கமுறப் பதிப்பித்து நம் தொன்மை யாவும்
துலங்க எண்ணி யாவருக்கும் பகிர்ந்தளித்து
தங்கம்போல் நம் தாயகத்தைக் காக்கும்
தமிழ்மணி செய் தக்கபணி நீடு வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதிசையும் புகழ்ந்தேத்தும் அண்ணாபோல
பைந்தமிழ்க்கோர் பணிசெய்யும் ஈழநாட்டில்
அலகிலருஞ் சாதனைகள் நிலையாய் நாட்டி
அதியுயர்ந்த பதவிகளை வகிக்கும் பாங்கில்
நலம்விரும்பித் தேடி வருவோர்களுக்கு
நாட்டமுடன் தேவைகளைப் பூர்த்தி செய்து
தலங்கள் தனை நல்லொழியாய்த் திகழவைக்கும்
தமிழ்மணி செய் தக்கபணி நீடு வாழ்க!

பந்தமொடு அந்திசந்தி பல கலைகள் கற்று
பக்குவமாகத் தன் பண்பைக் காத்து
செந்தமிழும் சிவநெறியும் தழைப்பதற்கு
சிந்தையாய்த் திருந்தெண்டு புரியும் பாங்கில்
எந்தமரின் வழிவந்த சிறார்கள் வாழ்வு
இனிதாகப் புலர்வதற்குப் பாதை காட்டும்
தந்தையைப்போல் பரிவாக விளங்குமெங்கள்
தமிழ்மணி செய் தக்கபணி நீடு வாழ்க!

பூந்தமிழின் சிரமணியாம் இலக்கியங்கள்
புதுப் பொலிவில் இந்நாளில் படைத்து மல்கும்
மாந்தருக்குள் மாணிக்கமாய் விளங்கி
மாபெரிய திசையெங்கும் பிரகாசிக்கும்
ஏந்தல் அன்புமணி இரா. நாகலிங்கம்
இருகோணங்களிற் செய்யும் பணிகளோங்கி
சாந்த குணமான மனைவி மக்கள் சுற்றம்
தரணிதனில் இறையருளால் என்றும் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்புமணி"யாற்றும் பணி

காலத்தால் அழியாத கன்னித் தமிழ்மணியே!
ஞாலத்தில் உன்புகழை யான்ஓத முடிந்திடுமோ?
ஞாயிறாய்த் திங்களாய் ஞாலமெலாம் நிறைந்துள்ள
ஞானஒளிச் சுடரே! நின்பணிக்கு ஈடேது?

இளமையிலே புலமைப்பரிசு வகுப்பைந்தில் பெற்று
களங்கமற கல்விகற்று சிறப்பால் சித்திபெற்று
எழுதுவினை ஞனாகி நிதியுதவியாளனாய் யுயர்ந்து
வழுவாது இராமகிருஷ்ண தொண்டில் இணைந்து
தளராது முயன்று நிருவாகசேவை சித்தியெய்தி
களுவாஞ்சிகுடி உதவி அரச அதிபராகி
இளஞாயிறென எங்கும் எதற்கும் தலைமகனாய்
இன்று வடகிழக்கு ஆளுனரின் பிரதிசெயலாளரானாய்.

பாரதம்புகழ் கல்கி ஆனத்த விகடனோடு
ஈழநாடு சுதந்திரன் தினகரன் தினபதி
வீரகேசரி தோறும் இலக்கியப் பணியாற்றி
கவிதை கட்டுரை சிறுகதை சித்திரத்தொடரென
"மலர்" மாதச்சஞ்சிகை வளமுற நடாத்தி
அழகுகலை ஓவியராய் புகைப்பட ஆர்வலராய்
விபுலாநந்தர் "பாவியம்" அச்சேற உழைத்து
"புலவர்மணி" நினைவுப்பணித் தலைவரானாய்.

நாடகங்கள் பல படைத்து வில்லன்
வேடங்கள் ஏற்று நடித்துப் புகழ்பெற்று
திடமான கருத்துக்களை தூவி நல்ல
பாடங்களாய் சமூக வெற்றிக்கு வழிசமைத்து
ஓடமாய் யாவரையும் ஒழுங்காய் கரைசேர்த்து
உடலூன நாயகியை நாயகன் ஏற்கின்ற
நாடகமாம் "நமதுபாதை" கனவதை நனவதாக்கும்
ஆடவனாய் வாழ்வில் அன்போடு வாழ்பவரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிவிடும் அருங்கலை அமிர்தங்களை எல்லாம்
கருகிவிடாது மின்கணணியில் அச்சேற்றிக் காத்திடவே
உறுதியுடன் கனேடிய நிபிலக்ஸ்யில் உழைத்துவே
பெருநிதியாய் புத்துயிரும் புதுப்பொலிவும் பெற்று
பெறதற்கரிய ''அன்புமணி'' உமதுபணி தொடர்ந்திடவே
ஊர்தோறும் கோயில்கள் கொண்டு நிற்கும்
மாறுபடாத் தெய்வங்கள் வரங்கள் நல்க!
அருளோடும் பொருளோடும் வாழ்க நீரே!

விண்ணகத்தே நீந்தும் மினினமே ஓடி
மண்ணகத்தே மட்டு வாவியிலே கூடி
பண்ணிசைத்தே நீரர மகளீரோடு பாடி
இன்னமுத ''அன்புமணி'' இலக்கியப்பணி போற்ற
தன்னொளியாம் ''தமிழ்மணிப்'' பட்டமதைத் தாங்கி
ஈன்றெடுத்த அன்னையவள் இதயமதில் தேங்கி
பொன்னெழுத்தால் ''பாதொடுத்துப்'' பலரறியச் சூட்டி
போற்றுகின்றேன் ''அன்புமணி'' தமிழ்ப்பணி வாழ்க!

த. மோகனராஜா
ஆசிரியர்,
ஆரையம்பதி - 3.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் பரவத்
# தமிழ்மணி வாழ்க நீடு!

வானத்தில் கண்சிமிட்டும் மீன் கூட்டங்கள்
மோனத்தில் நின்று அழும் முகிற் கூட்டத்துள்
நாணத்தில் ஒளிந்து நின்று நகைப்பது போல் தேன்
பானத்தில் தமிழ்வளர்க்கும் தமிழ்மணியை வாழ்த்தும்

சாணத்தில் துலங்கும் அருள் இல்லங்களாய்
கோணத்தில் இருந்து வரும் குருவிகள் போல்
கானத்தில் மயங்கும் கலைவாணர் கூட்டம்
வானத்தில் ஒளிர்வது போல் கூடுகின்றார்.

மானத்தில் ஆரையூரை யுயர்த்தி வைத்து
மீனத்தில் கொடிவரைந்த பாண்டியராய்
தானத்தில் தலை நிமிர்ந்த அறிஞர் வாழ்த்தும்
ஞானத்தின் சுடர் பரவத் தமிழ்மணியே வாழ்க நீடு.

ஒளிவளர் விளக்காய் ஆரையூரின் புகழைப் போற்றி
அளிவளர் மக்கட் கன்பெனும் கனிச்சாறூட்டி
தெளிவளர் தெய்வக் கலையெலாம் தொகுத்து ஏற்றி
களிவளர் தமிழ்த் தொண்டாற்றும் தமிழ்மணி வாழ்க நீடு!

தொழில்வளர் இராசையா துணைவியார் தங்கப்பிள்ளை மகனாம்
கலைவளர் நாகலிங்கம் கற்றவர் போற்றும் சான்றோன்
பணிவளர் அரச பெரும் பதவிகள் ஏற்றபோதும்
கனிவளர் தமிழ்த்தொண்டாற்றும் தமிழ்மணி வாழ்க நீடு!

அருள்வளர் இராமகிருஷ்ணர் அருளுபதேசம் பெற்று
இருள்வளர் புவியிலுள்ள இன்னல்களெல்லாம் வென்று
பொருள்வளர் ஆசைநீக்கிப் புத்தரைப் போல வாழ்ந்து
களிவளர் தமிழ்த்தொண்டாற்றும் தமிழ்மணி வாழ்க நீடு!

இறையடியான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை பாட வாருங்கடி!

இசைபாட வாருங்கடி எண்திசை போற்றப் பாடுங்கடி
அசைபோட்டுப் பாடுங்கடி பண்சுதிகூட்டிப் பாடுங்கடி.

(இசை)

கிழக்கினிலே ஒளிதுலங்க - விடி
விளக்காய் அன்புமணி
இலக்கியத்தில் இமாலயமாய் – நொடிப்
பொழுதில் கவிதை படைக்கும் அன்பானவன்
— கட்டுரை படைக்கும் பண்பானவன்.

(இசை)

செந்தமிழில் செகம்புகழ - முடி
வேந்தர்களும் வந்துதொழ
விந்தையோடு வியப்புமெழ
சிந்தையிலே தெளிவுபெற நாடகங்கள் தந்தவன்
— வில்லன் வேடங்களில் வந்தவன்.

(இசை)

மட்டுநகர் மாதா வாழ்ந்த - கொடி
கட்டியாரையூர் ஏற்ற
பாட்டினிலே பாவலர்கள் போற்ற
இட்டமுடன் இந்துகலாச்சார அமைச்சு வாழ்த்தியவன்
— சாகித்திய விழாவில் போற்றியவன்.

(இசை)

கலை தோன்றப் பாடுபட்ட அன்புமணி கலாவல்லவனை
காலமெல்லாம் போற்றி நாம் வாழ்த்திடுவோமே
வாழும்வரை அவன்புகழ் மீட்டிடுவோமே

(இசை)

இலக்கியத்தில் தமிழ்மணி பட்டம் பெற்றவனை
துலங்கிடப் பாடுவது நமதுபணி
குலம்விளங்கிடப் போற்றுவது நமதுபணி.

(இசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் – இந்தோளம். தாளம்– ஆதி.

**பல்லவி**

எங்கள் அன்புமணி - எழில்பொங்கும்
இங்கெனக்கின்பமென ஏற்றார் இலக்கியப்பணி
(எங்)

**அனுபல்லவி**


மங்களமாக ஆற்றினார் மக்கள்பணி
சிங்காரமாக திரண்டனர் மக்களணி

**சரணங்கள்**

ஆண்டதாறினில் பெற்றார் புலமைப் பரிசு
அல்லும்பகலும் கற்று சித்திபெற்றார் எஸ். எல். ஏ. எஸ்
திரைகடல் தீபமேற்றி திக்கெட்டும் புகழைநாட்டி
கரையிலாக் களிப்படைய பெற்றார் சாகித்தியப்பரிசு.
(எங்)

நெஞ்சாரத்தொண்டதனை நேர்த்தியாகச் செய்தார்
அஞ்சாமல் ஆக்கங்களை இன்சுவையாகப் படைத்தார்
பஞ்சாமிர்தப் பைந்தமிழ் இலக்கிய மளித்தார்
சஞ்சலம் தீர்க்கவென்று தரணியில வதரித்தார்.
(எங்)

— ஆரையூர் அருள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமனே "தமிழ்மணி" ஆனாய்

ஆரையம்பதி - ஆ. தங்கராசா.

அன்பு மணியே! அறிவான தமிழ் மணியே
இதயத்தைத் தொடுகின்ற இலக்கியங்கள் செய்தவனே!
பண்பான லிங்கமே! படித்துத் தெளிந்தவனே!
புண்ணான மனதைக்கூடப் புகழான எழுத்துக்களால்
கண்ணாக வைத்தாய் கனிவோடு கதைகள் தந்தாய்
கனிவான பேச்சும் கவருகின்ற சிரிப்பும்
உணர்விலே மற்றவரை உறுதியாய் கவர்ந்து விடும்
உத்தமனே உன்சேவை இமயமாய் வளரக் காண்போம்.

பரமன் சனசமூகப் படிப்பகத் தமிழ் மணியில்
பேனாவால் எழுதிப் பிரசுரித்த கையேட்டில்
அருமையாம் விதியா? எழுச்சிக் கதை தந்தாய்
அப்பா தம்பிமார் அருமந்த குடும்பத்தார்
பெருமையாய் முன்வந்து பழந்தமிழ் நாடகம் தந்தீர்
பொறுத்தது போதும் பொங்கி எழ வைத்த மனோகராவில்
கருத்தோடு நடித்தாய்! கருணாநிதியின் எழுத்தில் மயங்கினாய்
கலை ஆர்வக் குடும்பத்தின் குலையாத உறுதி கண்டோம்.

கலைக்கழக நாடகத்தார் கனிவோடு புகழ்ந்து சொன்ன
குன்றாத திரைகடல் தீபமாம் கொள்கை நாடகத்தில்
கலையாத கருத்துத் தந்தாய் கன்னித்தமிழுக்கு மெழுகு போட்டாய்
கல்கி எனும் அற்புதக் கதை புனையும் தமிழ் ஏட்டில்
மலைக்காது கதை எழுதி மண்ணுக்கு மகிழ்வு செய்தாய்
மலையான கலைக்கதிரில் மலர்போன்ற கதை எழுதி
நிலையான புகழ்பெற்றாய் நின்புகழை எவர்மறுப்பார்
நண்பனாய் ஆசானாய் நலமோடு உதவி செய்தாய்.

மலரெனும் மகத்தான மருக்கொழுந்து புகழ்ந்து சொன்ன
மற்றவரை மதித்து முறையாக எழுதவைத்தாய்
தலையான நாடகங்கள் தரமான வானொலியில்
தந்தவனே தொடரான தமிழ் நாடகம் போட்டவனே
இலையாக உதிரவில்லை இமயமாய்ப் பொலிந்தாய்
இன்பத் தமிழுக்கு ஆராய்ச்சிக் கட்டுரை தந்தாய்
அலைபாயும் மனதுக்கு அற்புதத் தந்தையின் நாவல் தந்தாய்
உன்னாலே தமிழ்வளர உத்தமனே தமிழ்மணி ஆனாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புமணி தருமோசை தமிழின் ஓசை

''கலைமணி மூனாக்கானா''

திருமுருகன் குடிகொண்ட சிவனார் பூமி
திருநகராம் ஆரைநகர் தன்னில் வாழ்ந்த
தருமநெறி தவறா இராசை யாவும்
தங்கமனப் பிள்ளையுடன் சேர்ந்தே பெற்ற
ஒருமகனே! திருமகனே! நாக லிங்கம்
உன்பணியே தமிழ்த்தாயின் பணியாய்க் கொண்ட
பெருமகனே ! உன்சேவை இன்னு மின்னும்
பெருகவென்றே மனமார வாழ்த்து கின்றோம்.

கல்விநெறித் திணைக்களத்தில் கணக்காள் வோனாய்
கச்சேரி தலைமைஉப அதிபராயும்
தொல்புகழ்சேர் திருமலையா ஞனரின் பிரதிச்
செயலாள ராகவும் நீ உயர்வு பெற்று
அல்லுபகல் ஓயாமல் கடமை யாற்றி
அயர்வுஎன்ற சொல்லழித்தாய் அகரா தியில்
சொல்லரிய கடமைகளைச் செய்தே உன்போல்
தூயதமிழ்த் தொண்டினையும் செய்வார் யாரே?

செந்தமிழ்சேர் கழகமெழுத் தாளர் மன்றம்
செப்பரிய கலைவிழா தமிழ்வி ழாக்கள்
எந்தவொரு மேடையிலும் நீயே நின்று
இயற்றமிழில் பேசிமக்கள் இதயம் வென்றாய்
சிந்தையெலாம் இனித்திடுமோர் நாடகத்தை
திரைகடலின் தீபமென மேடையேற்றி
தந்ததுவுமல்லாமல் நடித்தும் காட்டி
சாகித்ய மண்டலத்தின் பரிசும் பெற்றாய்.

உன்னுடைய கையிலுள்ள பேனை தன்னில்
ஊறுவது மையல்ல தமிழி னூறல்
அன்னநடைக் குமரியென நளினங் காட்டும்
அழகு தமிழ் நடையன்பு மணிக்கே சொந்தம்
மின்மினிபோல் மின்னுமெழுத் தாளர்க் குள்ளே
விடிவெள்ளி போல்கலையின் விடிவுக் காக
இன்னுமின்னும் தொண்டுசெய்தே உயர்க வென்று
இறைவனை நாம் கைகூப்பி வணங்கு கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கட்டுரைகள் விமர்சனங்கள் ஆய்வா ராய்ச்சி
கதைகளொடு நாடகங்கள் என்று நீயும்
தொட்டதெல்லாம் தமிழ்த்தாயின் பூணா ரங்கள்
தொடர்ந்தளித்து கலைமணியென் றுலகு போற்ற
பட்டமதைத் தந்தார்கள் ஆட்சி யாளர்
பாராட்டி விழாவெடுத்தோ மின்று நாங்கள்
அட்டதிக்கும் உன்நாமம் பரவக் கேட்டு
ஆரையூர் மக்களெல்லாம் அகம்பூ ரித்தோம்.

சிந்தைதொடு மொருதந்தை கதையின் மூலம்
சிறந்ததந்தை மகன்செயலின் சிறப்பைச் சொன்னாய்
இந்துமுஸ்லிம் ஒற்றுமையும் தொட்டுக் காட்டி
இனமதங்கள் கடந்தவனாய் நிலைத்து நின்றாய்
கந்தனுறை மலைதாந்தா மடத்தில் தெய்வ
களைபொழியும் மோவியமும் வரைந்தே வைத்தாய்
அந்தமிலாக் கோயில்மணி சமய ஓசை
அன்புமணி தருமோசை தமிழி னோசை.

உன்னுடைய புகழதனை பரணி பாட
ஒப்பற்ற சயங்கொண்டா ரின்று இல்லை
மன்னுதமிழ் அரசர்களோ எவரு மில்லை
மத்தகத்தி லுனை யேற்றி உலாக்கள் செய்ய
பொன்னுலகில் வாழ்கின்ற விபுலாநந்தன்
பூமியிலே இன்றிருந்தால் அணைத்தே உன்னை
என்னருமைத் தமிழ்மகனே! என்று வாழ்த்தி
இறும்பூது எய்திடுவார் இதுவோ ருண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'தமிழ் மணி'யான 'அன்புமணி'

க. தங்கேஸ்வரி, B. A. (Hons.)

1984ம் ஆண்டு ஒருநாள், எனது கடமை தொடர்பாகக் களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் செல்கிறேன். அனுமதி கிடைத்ததும் உதவி அரசாங்க அதிபர் அறைக்குள் நுழைகிறேன். முகமலர்ந்த புன்னகையுடன் இதமான வரவேற்பு. முன்பின் தெரியாத என்னை ''வாங்க, வாங்க, இருங்க'' என சிறிது இந்தியப் பாணியில் உபசரிக்கிறார். (இது அவரது இயல்பு என்பதைப் பின்னால் அறிந்துகொண்டேன்.) குளிர்பானம் வருகிறது. உரையாடல் ஆரம்பிக்கிறது. நான் இந்து கலாசார அமைச்சின் உத்தியோகத்தர். கலாசார நடவடிக்கை தொடர்பாக வந்திருக்கிறேன் என்று சொன்னதுதான் தாமதம், கடல்மடை திறந்தாற்போல் பேச ஆரம்பித்துவிடுகிறார் அவர்.

கிராமியக் கலைகளின் இன்றைய நிலை, அவை பேணப்படவேண்டியதன் அவசியம், ஆய்வு செய்யப்படவேண்டிய அவசியம் நூல்களாகத் தொகுக்கப்படவேண்டியதன் அவசியம், வானொலி, ரூபவாஹினி முதலியவற்றில் இடம்பெறச் செய்யவேண்டியதன் அவசியம், கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டிய அவசியம் -

அடேயப்பா! இப்படியான ஒரு அனுபவத்தை நான் எந்த ஒரு உதவி அரசாங்க அதிபரிடமும் இதுவரை பெறவில்லை. அமைச்சில் அறிந்திராத எத்தனையோ விடயங்கள் அவர் பேச்சில் இடம்பெற்றன. நான் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அன்று அவர் கூறிய பல விடயங்களைப் பின்னால் ஒவ்வொன்றாகச் செயல்படுத்திக் காட்டினார். அந் நடவடிக்கைகளை நேரில் கண்டது மட்டுமல்ல அவற்றுடன் நானும் சம்பந்தப்படவேண்டி ஏற்பட்டது என்பதையும் இங்கு மகிழ்வுடனும், பெருமிதத்துடனும் கூறிவைக்க விரும்புகிறேன்.


அன்று ஆரம்பித்த எங்கள் கலாச்சாரத் தொடர்பு இன்றுவரை தொடர்ந்தது.

'அன்புமணி' என்ற பிரபல எழுத்தாளருடன் இணைந்து செயலாற்றுகிறோம் என்ற எண்ணமே ஒரு பெரிய உந்து சக்தியாக எனது கலாசார நடவடிக்கைகள் யாவற்றையும் வெற்றிகரமாக நிறைவேற்ற உதவிவருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'அன்புமணி' அவர்கள் அன்று களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபராக எனக்கு அறிமுகமானார். பின்னால் அவர் மட்டக்களப்புக் கச்சேரியின் தலைமையக உதவி அரசாங்க அதிபராக, வடக்கு - கிழக்கு மாகாண சபை உள்துறை அமைச்சின் உதவிச் செயலாளராக, ஆளுநர் செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் படிப்படியாக உயர்வு பெற்றுள்ளார். ஆனால் அன்று நான் கண்ட அதே இனிய, எளிய, அமைதியான மனிதராகவே இன்றும் அவர் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல, அன்றுமுதல் இன்றுவரை அவர் உத்தியோக ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் மேற்கொண்ட சகல கலை, இலக்கிய, சமய நடவடிக்கைகளிலும் ஏதோ ஒருவகையில் நானும் சம்பந்தப்பட்டுள்ளேன் என்பதை மிகுந்த தன்னடக்கத்துடன் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். எண்ணற்ற நடவடிக்கைகள் - இலக்கியக் கூட்டங்கள், நூல் வெளியீடுகள், கிராமியக் கலைவிழா, புத்தாண்டுக் கலைவிழா, மட்டக்களப்புக் கலாச்சாரப் பேரவை நடவடிக்கைகள், கலைஞர் கௌரவம், சாகித்திய விழா, நூல் கண்காட்சி, சுவாமி சுஹனானந்தா வருகை, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நடவடிக்கைகள், நினைவு மலர் வெளியீடுகள், நூல் பதிப்பித்தல், கண்டி, கொழும்பு, திருகோணமலை முதலிய இடங்களில் நடைபெறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகள், புலவர்மணி நினைவுப்பணி மன்ற நடவடிக்கைகள் என எத்தனையோ நிகழ்வுகள். அத்தனையும் இவரது பாரிய உத்தியோகக் கடமைகளுக்கும் மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



அன்புமணியின்
அருமைத் தந்தையார்
வைரமுத்து இராசையா

இவை அத்தனையிலும் நானும் சம்பந்தப்பட்டுள்ளவன் என்ற வகையில், 'அன்புமணி' என்ற இலக்கியவாதியின் ஆளுமைக்கும், ஆற்றலுக்கும், அளப்பரிய செயற்பாடுகளுக்கும் நானே சாட்சியாக நிற்கின்றேன். அவருடைய இம்முயற்சிகளில் அணில் பங்களிப்பாக என் பங்களிப்பும் இடம்பெறக் கிடைத்தது என் பாக்கியமே.

'அன்புமணி' அவர்கள் கிழக்கிலங்கையின் கலை, இலக்கிய முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதுடன், கிழக்கிலங்கையின் பாரம்பரியச் சிறப்புகள், புலவர் பெருமக்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் முதலியவற்றை ஈழத்து இலக்கியப் பரப்பில் பதிவுசெய்வதுடன், அவற்றை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்துவதிலும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் என்றால் அது மிகையாகாது. தனது குடும்ப நன்மைகளைக் கருத்திற்கொள்ளாது, தனது மனைவி மக்களின் தேவைகளைக் கவனிக்காது, ஏன் தனது சொந்த நலன்களையே சிறிதும் கவனத்திற்கொள்ளாது, இப்பணிகளில் அவர் ஈடுபட்டுவருகிறார் என்பது நாடறிந்த உண்மை. (இது தொடர்பான மேலும் விபரங்கள் 'தொண்டன்'' மார்கழி இதழில் வெளிவந்துள்ளது. மலர்வேந்தன் அவர்களின் பேட்டிக் கட்டுரையில் காணலாம்.

இவருக்குள்ள பிரமுகர்களின் தொடர்பு, உயர் உத்தியோக அந்தஸ்து, அச்சக நண்பர்கள் தொடர்பு, இலக்கிய நண்பர்கள் தொடர்பு முதலியவற்றைக் கொண்டு இவருடைய எத்தனையோ படைப்புகளை நூலாக வெளியிட்டிருக்கலாம். பிரமாதமான வெளியீட்டு விழாக்களை நடாத்தியிருக்கலாம். ஆனால் அவர் இவ்வாறு செய்யவில்லை. அன்றுமுதல் இன்றுவரை பிறருடைய ஆக்கங்களையே நூலாக வெளியிட்டு உற்சாகப்படுத்தி வருகிறார். அந்த வகையில் களுவாஞ்சிக்குடி சைவமாமணி, பண்டிதர் வி. விசுவலிங்கம் அவர்களின் ''மண்டூர் பிள்ளைத்தமிழ்'', இலக்கியமணி ஆரையூர் நல் அழகேசமுதலியார் அவர்களின் ''ஆரையூர்க்கோவை'', கவிஞர் செ. குணரத்தினம் அவர்களின் ''நெஞ்சில் ஒரு மலர்'', ரவிப்பிரியாவின் ''வானவில் ரோஜாவாகிறது'', மகாவித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்களின் ''மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - 2'' முதலிய நூல்களை வெளியிடுவதில் முக்கிய பங்கெடுத்ததுடன் இவற்றுக்கு சிறப்பான வெளியீட்டு விழாக்கள் நடாத்துவதிலும் முன்னின்று உழைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் வெளிவந்த பல நூல்களின் பின்புற அட்டையில் நூலாசிரியரைப்பற்றி குறிப்பு இவர் எழுதியதாகவே இருக்கும். அதுபோலவே நூல்வெளியீட்டு விழாக்களில் பிரதம நூல் விமர்சகராகவும் இவர் இடம்பெற்று வருகிறார்.

இவருடைய இலக்கிய நண்பர் இலக்கியமணி க. தா. செல்வராசகோபால் அவர்கள் கனடாவில் 'றிப்ளக்ஸ்' அச்சகம்மூலம் ஏராளம் நூல்களை மின்கணணி முறையில் அச்சிட்டு வெளியிட்டு வருகிறார். இந்நிறுவனத்தின் மூலம் இவரது நூல்கள் ஒன்றுகூட வெளிவரவில்லை. ஆனால், வித்துவான் ச. பூபாலப்பிள்ளை அவர்களின் ''சீமந்தினி புராணம்'', வித்துவான் அ. சரவணமுத்தனின் "சனிபுராணம்" முதலிய பழைய நூல்களை மறுபதிப்புச் செய்ய இவர் உதவியுள்ளார். இவ்வாறு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களைப்பற்றிய ''புலவர்மணிகள் கோவை'' செட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவர் அவர்களின் ''கவிதைத் தொகுப்பு'' முதலியன வெளிவருவதற்கும் உதவி செய்துள்ளார். கனடா ''றிப்ளக்ஸ்'' அச்சகம் வெளியிட்டுள்ள பல நூல்களுக்குப் பதிப்பாசிரியராகவும் இருந்திருக்கிறார் இவர்.

அண்மையில் திருகோணமலை ந. பாலேஸ்வரியின் ''தத்தைவிடு தூது'', எஸ். எல். எம். ஹனிபாவின் ''மக்கத்துச் சால்வை'' போன்ற நூல்கள் வெளிவருவதிலும் இவர் முன்னின்று பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

''உதயம்'' நிறுவனம் வெளியிட்டுள்ள பல நூல்கள் வெளிவருவதிலும், அவற்றை வாசகர் மத்தியில் பரப்புவதிலும் இவர் மேற்கொண்ட பங்களிப்பு மகத்தானது. ''உதயம்'' நிறுவனத்தாரின் நெருக்குவாரத்தின் காரணமாக இவரது ஒரே ஒரு நூலான ''ஒரு தந்தையின் கதை'' வெளிவந்தது. ஆனால் அந்த நூலுக்குக் கூட ஒரு சிறப்பான வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யவில்லை. ஏனோதானோ என்ற வகையில் இந் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், மலையகம் முதலிய இடங்களில் வெளிவந்த ''அவர்களுக்கும் வயது வந்துவிட்டது'' (க. அருள் சுப்பிரமணியம்), "நாளை" (காவலூர் ஜெகநாதன்), ''அரசிகள் அழுவதில்லை'' (முல்லைமணி), ''நிலக்கிளி'' (பாலமனோகரன்), ''ஒரு கூடைக் கொழுந்து'' (என். எஸ். எம். ராமையா) முதலியோரின் நூல்களுக்கு மட்டு நகரில் அறிமுக விழா ஏற்பாடு செய்தார். அது போலவே அண்மையில் வெளிவந்த மட்டக்களப்பு நூல்களான "புலவர்மணிக்கோவை", "பாலைக்கலி", "சைவமும் நாமும்", "மட்டக்களப்பு சைவக் கோயில்கள்", "விபுலாநந்த ஜீ" முதலிய நூல்களுக்குத் திருகோணமலையில் ஒரு அறிமுக விழா நடைபெற ஏற்பாடு செய்தார். இவற்றுள் "பாலைக்கலி", புலவர் மணிக்கோவை'' முதலிய நூல்களுக்குக் கொழும்பிலும் அறிமுக விழா நடைபெறச் செய்தார்.



அன்புமணியின்
அன்புத் தாயார்
**பொன்னர் தங்கப்பிள்ளை**

பல முதிய தமிழறிஞர்கள், கலாசாரப் பேரவையினது கௌரவம் பெறுவதிலும், தேசிய விருது பெறுவதிலும் முன்னின்று உழைத்தவர் இவர்.

இவ்வாறு வாழ்நாள் முழுவதையும் இலக்கியப் பணிக்கு உரம் வழங்கியவருக்கு மிகப் பெரிய கௌரவங்கள், மிகப் பழைய காலத்தில் வழங்கப்பட்டிருக்கவேண்டும். இப்போது "தமிழ்மணி'' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுகூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மண்ணின் கண்ணில் இன்னும் சரியாகப் படவில்லை. இதுபோன்ற கௌரவம் பெற்றவர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் மக்கள் தமது நன்றிக்கடனைத் தகுந்த முறையில் செலுத்தியுள்ளார்கள். இவற்றைச் சிறிதும் எதிர்பார்க்காதவர் "அன்புமணி" என்ற காரணத்தினால்போலும் மட்டக்களப்பு மக்கள் இவற்றைக் "கண்டுக்காமல்" இருக்கிறார்கள்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு எத்தனையோ பட்டங்கள் வழங்கப்பட்டபோதும் "புலவர்மணி" என்ற பட்டமே மேலோங்கி நிற்கிறது. அது போலவே "அன்புமணி" அவர்களுக்கு பெயருக்கேற்ற வகையில் அவர் நடந்துகொள்வதால் "அன்புமணி" என்ற பட்டமே நிலைத்துவிட்டது. ஏனைய பட்டங்கள் சூரியனுக்கு முன் மின்மினியாகி விடுகின்றன. உண்மையில் "அன்புமணி" என்ற பெயருக்கு இலக்கணமாக அவர் வாழ்க்கை அமைந்துள்ளது. "பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே', என்ற பாரதியின் வாக்கும், "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற வள்ளுவர் வாக்கும் இவருக்கே மிகவும் பொருந்தும். உதைத்த காலுக்கு முத்தமிடுவதே இவரது இயல்பாக உள்ளது.

'அன்புமணி' அவர்களின் இலக்கிய வாழ்வு பற்றிச் சொல்ல இன்னும் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. அவரது காரியாலய கடமைகள்பற்றிச் சொல்வதற்கு அதைவிட அதிகமான விடயங்கள் இருக்கின்றன. இந்தச் சிறிய கட்டுரையில் அவைபற்றியெல்லாம் சொல்லமுடியவில்லையே என்பது என் மனக்குறையாக உள்ளது. கடமையின் இலக்கணமாகக், கண்ணியத்தின் பிறப்பிடமாக, பண்பின் இருப்பிடமாக அவர் தனது காரியாலய கடமைகளைக் கவனித்து வருகிறார். அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தமையால் இப்பண்புகளையெல்லாம் நேரிலேயே என்னால் அவதானிக்க முடிந்தது.

அலுவலகக் கடமைகளில் மனிதாபிமானத்துடன் பிரச்சினைகளை அணுகி, அவற்றை விரைவாகத் தீர்த்துவைக்கவேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார். இதையே பிறருக்கும் எடுத்துக் கூறுவார். தான் சிரமப்பட்டாலும் தன்னைத் தேடி வருபவர்கள் சிரமப்படக்கூடாது என்பது அவரது கொள்கை. அதனால் வீட்டிலிருந்து கொண்டுவரும் சாப்பாட்டுப் பார்சல் மீண்டும் வீட்டுக்கே செல்வதுமுண்டு. 'கருமமே கண்ணாயினார், கண்துஞ்சார், பசிநோக்கார்' என்பதற்கு இவர் ஒரு பிரத்தியட்ச உதாரணம்.

இவரது தனித்துவமான பண்புகள்பற்றிச் சொல்லத்தானால் அது இன்னொரு கட்டுரையாகிவிடும். எல்லோருடனும் கலகலப்பாகப் பழகும் இனிய சுபாவம், இலேசான நகைச்சுவை தன் அந்தஸ்தை மறந்து கீழிறங்கிக் குழந்தையாக மாறும் பண்பு, இனிப்புப் பண்டங்களில் ஒரே பிரியம், இறைபக்தி, இராமகிருஷ்ண மிஷன் ஈடுபாடு, சுவாமி விவேகானந்தர் உபாசனை, சுவாமி விபுலாநந்தர் போற்றுதல், இனிய கீதங்களில் லயிப்பு, கர்நாடக சங்கீத ரசனை, நாட்டியங்கள், நாடகங்களில் ஒரு மோகம், எழுத்தாளர் "கல்கி"மேல் ஒரு நாயக வழிபாடு, இலக்கியவாதிகள் அனைவரிலும் ஒரு மதிப்பு, உண்மை நட்புக்கு ஒரு பக்தி, உள்ளன்புக்கு ஒரு பணிவு — அப்பப்பா, எதைச் சொல்வது? எதை விடுவது? ◎



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி)

— செ. குணரத்தினம்.

அன்புமணி என்னும் அழகான புனைப்பெயருக்கு முற்றிலும் பொருத்தமானவர்தான் இரா. நாகலிங்கம் என்கின்ற அற்புதமான மனிதர்.

மட்டக்களப்புக் கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபராக - தற்போது சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஆளுனர் செயலகம், திருகோணமலையில் கடமை பார்க்கும் இவர் ஆரையம்பதியை பிறப்பிடமாக் கொண்டவர். 1953ல் எழுத்துலகில் பிரவேசித்த இவரது முதற்கதை ''கிராமபோன் காதல்'', கல்கியில் வெளிவந்தது. அறுபதுகளில் தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தவர். தற்போது எழுதுவது குறைவு;

கல்கி, கங்கை, கண்ணன், புதுமை, மர்மக்கதை முதலிய தமிழகத்து ஏடுகளிலும் இலங்கையிலிருந்து வெளி வந்த - வெளிவந்து கொண்டிருக்கிற பற்பல பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் நிறையவே எழுதிக் குவித்த அன்புமணி இன்று எழுத்துலகில் மின்னுகின்ற பல இளம் எழுத்தாளர் – கவிஞர் நட்சத்திரங்களை உலாவரச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு உயர்ந்த இலட்சியவாதியாவார்.

எழுத்துலகில் அந்தரங்க சுத்தியுடன் ஈடுபட்டுள்ளவர். 1960ம் ஆண்டில் உருவான மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகப் பல வருடங்கள் பணி புரிந்தவர். 1962இல் ''திரைகடல் தீபம்'' என்னும் நாடகம் எழுத்துப் பிரதிக்கு இலங்கைக் கலைக் கழகத்தின் முதற்பரிசைப் பெற்றவர். (பின்னர் இந்நாடகம் மட். நகர மண்டபத்தில் 2 நாள் தொடர்ந்து மேடையேறியது. இதனை நெறியாள்கை செய்ததுடன் பிரதம பாகத்தில் நடிக்கவும் செய்தார்.)

ஈழத்து இலக்கிய உலகில் இன்னும் பேசப்படும் சிறப்புமிக்க ''மலர்'' இலக்கிய மாசிகையின் ஆசிரியராக (1970/71) இரு வருடங்கள் பணியாற்றினார். ''மலர்'' வெளியீடாக செ. யோகநாதனின் ''ஒளி நமக்கு வேண்டும்'' (குறுநாவல் தொகுதி), 'முல்லைமணி'யின் ''அரசிகள் அழுவதில்லை'' (சிறுகதைத் தொகுதி), அருள் சுப்பிரமணியம் எழுதிய ''அவர்களுக்கு வயது வந்துவிட்டது'' (நாவல்) வெளிவந்தன.

மட்டக்களப்பில் இடம்பெறும் பல இலக்கிய விழாக்கள், கலை விழாக்கள், நூல் வெளியீடுகள், நூல் அறிமுக விழாக்கள் முதலியவற்றுக்கு பின்னணியில் செயல்பட்டு வருகிறவர் இவர். இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும், புதிய ஆற்றல்களை இனம் கண்டு வளர்ப்பதிலும் அக்கறையுள்ளவர்.

மட். அரசாங்க அதிபரைத் தலைவராகக்கொண்டு இயங்கும் மட்டக்களப்பு கலாசாரப் பேரவையின் நீண்ட கால உறுப்பினர். இப்பேரவையின் சகல, கலை, இலக்கிய நிகழ்ச்சிகளிலும், தீவிர பங்களிப்புச் செய்து வருகின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கையில் இடம்பெறும் பல நாடகப் போட்டிகள், பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் நடுவராகக் கலந்து சரியான மதிப்பீடு செய்வதில் துணை நிற்பவர்.

களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் சைவமாமணி வி. விசுவலிங்கம் அவர்களின் ''மண்டூர்ப் பிள்ளைத் தமிழ்'' (செய்யுள் நூல்), சு. ஸ்ரீஸ்கந்தராசாவின் ''சந்ததிச் சுவடுகள்'' (நாடகத் தொகுதி) முதலியவற்றை வெளியிட்டதுடன் இப்பகுதியில் கலை, இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்தவர். அது மாத்திரமல்ல இவர் ஒரு சிறந்த நாடக ஆசிரியர். ஒரு சிறந்த குணச்சித்திர நடிகர். திறமையான இயக்குனர். தரமான புகைப்படப் பிடிப்பாளர். கேலிச் சித்திரக்காரர். ஓவியர் என்பதெல்லாம்கூடச் சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கிறது.

இசை, நடனம், ஓவியம், சிற்பம், சித்திரம் முதலியவற்றில் இவருக்குள்ள பரிச்சயமும் ஈடுபாடும் இவரது பல ''வானொலிப் பேச்சுகளிலும், பத்திரிகைக் கட்டுரைகளிலும் வெளிப்படுகின்றன.

அதிகமான சிறுகதைகளை எழுதியவர். அநேகம் எழுத்தாளர் - கவிஞர்களை இனம் காட்டியவர். ஆசைக்கு எழுதி வெளியிட்ட ஒரேயொரு நாவல் ''ஒரு தந்தையின் கதை'' உதயம் வெளியீடாக 1989ல் வெளிவந்தது. உதயம் வெளியீட்டுக் குழுவின் நிறுவன உறுப்பினராகவும் இவர் பணி புரிந்து வருகிறார்.

தலைமையக உதவி அரசாங்க அதிபராகக் கடமை பார்க்கும் இவருக்குள்ள வேலைப் பழுவின் மத்தியிலும் தலைமறைவாகவிருந்து இலக்கியப் பணியாற்றியவர். அத்துடன் ''புலவர்மணி நினைவுப் பணிமன்ற'' தலைவராகவும், ''தரிசனம்' உபதலைவராகவும், விபுலாநந்த நூற்றாண்டு விழாச் சபை, மட். இந்து இளைஞர் மன்ற செற்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வந்தார்.

இயல்பாகவே நகைச்சுவை உணர்வு மிக்கவர். தனக்கு ஆயிரம்தான் கவலை இருந்தாலும் அவற்றையெல்லாம் மறந்து தன்னை எதிர்கொண்டு வருவோரை நகைச்சுவையோடு பேசிச் சிரித்து, வரவேற்று உபசரிப்பது இவர் பண்பு.

இலக்கியத்தின் பண்பு, பயன், பயிற்சி இவற்றைப்பற்றி நன்கு புரிந்து கொண்ட காரணத்தால், வரட்டுத்தனமான கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு இலக்கியத்தைத் தரிசிப்பவர் இவர். இப்பண்பு இவரது மேடைப் பேச்சுகளிலும், விமர்சனக் கட்டுரைகளிலும் வெளிப்படத் தவறுவதில்லை. எழுத்தாளரை விமர்சிக்காது, எழுத்தை மட்டும் விமர்சிப்பது இவர் அணுகுமுறை. எனவே மாற்றுக் கருத்து உள்ளவர்களும், இவரது இலக்கியத் தேடலுக்கு மதிப்பளிப்பதை நாம் பார்க்க முடிகிறது.

இலக்கியம் என்பது இதயத்தால் தரிசிக்க வேண்டிய ஒரு சங்கதி. அதை மூளையால் தரிசிக்க முடியாது என்பது இவரது வாதம். இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் விமர்சன உலகில் குட்டை குழப்புவதை இன்னும் நாம் பார்க்கிறோம். உலக மகா இலக்கியங்கள் அனைத்தும் ''அன்புமணி''யின் கூற்றுக்கு ஆதாரம்.

பல நூல்களுக்கு இவர் எழுதியுள்ள அணிந்துரைகள் இதை நன்கு நிரூபிக்கின்றன. விமர்சனக்கலை என்பது ஆங்கில இலக்கியம் தமிழுக்களித்த ஒரு இலக்கிய வடிவம் என்ற போதிலும், விமர்சனம் எப்படி அமையவேண்டும் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது வள்ளுவர் கூறியிருக்கிறார்.

''குணம் நாடிக் குற்றமும் நாடி
மிகைநாடி மிக்ககொளல்'' என்பது அவரது கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இக்கால விமர்சனங்கள் பல வேண்டியவர்களினால் ''குணம்'' மட்டுமே நாடுவதாகவும், வேண்டாதவர்களானால் குற்றம் மட்டுமே நாடுவதாகவும் இவர் கூறுகிறார். இக்கூற்றை விமர்சகர்கள் சிந்தனைக்கு விடுகிறேன்.

இவரது விமர்சன அணுகுமுறை வித்தியாசமானது. எழுத்தாளரைத் தட்டிக் கொடுக்கும் motivation என்ற அடிப்படையில் அமைந்தது என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை.

நமது கலை, இலக்கியம், நாடகம் முதலிய யாவும் மேம்பட வேண்டுமென்று பணியாற்றும் இவர் பல்வேறு இலக்கிய வடிவங்களில் கைவைத்து வெற்றியும் கண்டவர்.

வானொலி, ரூபவாஹினி போன்றவற்றில் பல உரைகளை நிகழ்த்திய அன்புமணி அவர்கள் மேடைகளில் பேசும்போது அலட்டிக்கொள்ளாமல் நேர்மையாக நல்ல கருத்துக்களை சொல்வதில் வல்லவர். துணிச்சல் மிக்கவரும் கூட.

தன்னலமில்லாது சேவையாற்றும் இவரை இன்னும் தமிழுலகம் சரியாகப் புரிந்து கௌரவிக்கவில்லை என்பது பல அன்புள்ளங்களின் ஏக்கமாகும்.

தனது பல வேலைகளுக்கு மத்தியில் விபுலானந்த இலக்கியத்தைக் கட்டி எழுப்புவதிலும், அது தொடர்பான நூல்களை வெளியிடுவதிலும் தற்போது இவர் அக்கறை காட்டி வருகிறார்.

மட்டக்களப்பில் வெளிவந்த பல பழைய நூல்களை மறுபதிப்புச் செய்வதிலும் இவர் கவனம் திரும்பியுள்ளது. அவ்வகையில் வித்துவான் ச. பூபாலப்பிள்ளை அவர்களின் ''சிமந்தினி புராணம்'', வித்துவான் சரவணமுத்தனின் ''ஸ்ரீ மாமாங்க விநாயகர் பதிகம்'', ''சனிவெண்பா'' முதலியன கனடாவில் உள்ள ''றிப்ளக்ஸ்'' அச்சகத்தில் மின்கணணியில் அச்சாகி வெளிவந்துள்ளன. இத்தகைய முயற்சிகளுக்கு கனடாவில் வசதியும் இலக்கியமணி க. தா. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனார்) இவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறார். இலக்கியமணி க. தா. செல்வராசகோபால் எழுதிய பல நூல்களுக்குப் பதிப்பாசிரியராகவும் இவர் பெயர் இடம் பெற்றுள்ளது. அவுஸ்ரேலியாவிலிருந்து பிரபல எழுத்தாளர் எஸ். பொ. அவர்களின் முயற்சியால் வெளிவரவிருக்கும் ''கிழக்கிலங்கைக் கதைவளம்'' நூலுக்கும் இவரே பதிப்பாசிரியர் என அறிகிறேன்.

ஆரம்ப காலத்தில் சிறுகதை, கவிதை முதலியவற்றில் ஆர்வம் கொண்டிருந்த இவர் அண்மைக் காலமாக பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வருவதையும் அவதானிக்க முடிகிறது. இவை பழந்தமிழ் இலக்கியம், பண்பாடு, வரலாறு முதலியவற்றில் இவருக்குள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுகிறது.

ஈழத்துத் தமிழர்கள் வரலாற்று மூலகங்களை அறிவதிலும், ஆய்வு செய்வதிலும் மிகவும் ஈடுபாடு கொண்ட இவர் பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, சேரர் வரலாறு முதலியவற்றிலும் ஆர்வம் கொண்டவர். அவ்வாறான ஒரு தூண்டுதலுக்கு ''கல்கி''யின் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், முதலிய நாவல்களே காரணம் என்பதை இவர் மனம் திறந்து சொல்கிறார். இவ்விடயங்களைப்பற்றிப் பேசும்போது இவர் மிகவும் கிளர்ச்சியடைந்தது இவரது எண்ணக் கருத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. (இவரது ''திரைகடல் தீபம்'' பரிசு நாடகம் ஈழத்துத் தமிழ் மன்னன் ''மானவர்மன்'' வரலாற்றைப் பின்னணியாக கொண்டது).

இவரது நிதானமான போக்குக்கு மூலகாரணம் இவரது இராமகிருஷ்ண சங்கத் தொடர்பு என்பது வெளிப்படை. சுவாமி விவேகானந்தர் இவருக்கு ஒரு இன்ஸ்பிரேஷன். சுவாமி விபுலானந்தர் இவரது மானசீகக் குரு. எனவே சர்வசமய சமரச நோக்கும், சமய வரம்பு கடந்த இறை சிந்தனையும் இவருக்கு இருப்பதில் ஆச்சரியமில்லை.

ஓ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மணியாகிய அன்புமணி

நாட்டிற் கினியபணி நாடிப் புரியுமொரு வீரர் – மனக்
கூட்டிற் கிடக்குமறி வாற்றல் வெளிக்கொணரும் தீரர்;
ஏட்டிற் புதுமைதவழ் இனிய இலக்கியஞ்செய் தோழர் – சபை
கூட்டித் தமிழினிமை கூறிக் களிக்குமெழி லாளர்.

அன்பிற் குழைத்ததமிழ் அள்ளிப் பெருக்குமுயர் நேசர் – ஒரு
அன்பு மணிப்பெயரை அண்டிச் சிறந்தவெழுத் தாளர்;
இன்பச் சுரங்கமெனும் எங்கள் தமிழ்மொழிகாப் பாளர் – தாம்
இன்புற் ரறிந்தசுவை எண்ணிப் பிறர்க்குதவும் தாசர்.

சீரின் இனியகவி, செல்வச் சிறுகதைசெய் வோர்கள் – இனி
ஆரின் துணையெமக்கு ஆகும் அவைபதிக்க* வென்று
தேரின் நணிசிறக்க சிந்தை இனிக்கமன வூற்றில் – இப்
பாரின் இனியமகன் பண்பிற் சிறந்தவன்பேர் தோற்றும்.

சாதிச் சமயவெறி வாதுக் கடிமையிலாச் சீலன் – ஒரு
பாதிக் குமையையெடுத் தாண்ட பரமனருள் பாலன்;
வாதித் தெவையுமுணர் வண்ணத் தனிமரபுக் காரன் – சிவ
சோதிக் கனல்வளர சிந்தை முகிழநிதம் வாழி!

‡ தங்கப் பிள்ளை தந்த மணி
தங்கப் பிள்ளை ஆன மணி
சங்கத் தமிழைக் கற்ற மணி
தமிழ்மா மணியா மன்பு மணி
வங்கக் கடலும் செங் கதிரும்
வானும் விரியும் வாறது போல்
எங்கும் இன்பத் தமிழ் பரப்பி
இன்புற் றென்றும் வாழிய வே!

* பதிக்க – நூலுருவாக்க.

‡ தங்கப் பிள்ளை – தாயாரின் பெயர்.

சி. க. பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இலக்கியச் சந்திப்பு




மட்டக்களப்புப் பிரதேசத்தில் இடம்பெறும் எந்தவொரு இலக்கிய முயற்சியிலும், - கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள், விமர்சன அரங்குகள், கலாசார விழாக்கள் - எதுவாயினும் அவற்றில் பெரும்பாலும் ஏதோ ஒருவகையில் ஒருவருடைய பங்களிப்பு, ஒத்துழைப்பு, செயற்பாடு நிச்சயமிருக்கும். மட்டக்களப்புப் பிரதேச இலக்கிய முயற்சிகளில், பங்களிப்புக்களில் இரண்டறக் கலந்தவர் இவர். அவர்தான் ''அன்புமணி'' என்று அனைவராலும் அழைக்கப்படுகின்ற திரு. இராசையா நாகலிங்கம் அவர்கள்.

தற்போது மட்டக்களபுக் கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும் இவர் பிரதேசப் பற்று மிகுந்த ஓர் எழுத்தாளர். மட்டக்களப்பின் பழம் பெருமைகளை, சிறப்புக்களை, இம்மண்ணுக்கே உரிய தனித்துவத்தை வெளிக்கொணர்வதில் ஆர்வத்தோடு ஈடுபடுபவர். நம்மோடு வாழ்ந்த - வாழுகின்ற அதேவேளை நம்மில் பலருக்குத் தெரியாத அறிஞர்களை, புலவர்களை, இலக்கிய விற்பன்னர்களை இனங்காட்டி நினைவூட்டி எல்லோரும் அறியும்படி ஏத்தி வைப்பவர். ஒரு காலத்தில் சிறந்த சிறுகதை எழுத்தாளராகக் குறிக்கப்பட்ட இவர் பல இளம் எழுத்தாளர்களுக்கு முன்னோடி; வழிகாட்டி. கிழக்கிலங்கை இலக்கியப் பரப்பில் ''அன்புமணி'' என்ற பெயர் ஆழமாகவே பதிந்துள்ளது.

மட்டக்களப்புக்குத் தெற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ள ''ஆரையம்பதி'' என்னும் கிராமம் இவரது பிறப்பிடம். அவ்வூர் பல கலைஞர்களின், கவிஞர்களின் இருப்பிடம். அந்த மண் வாசனை அதிகமாகவே இவரிடம் படிந்துள்ளது. அரச பணிக்கு மத்தியிலும் இலக்கியப் பணி புரிவதில் அன்று முதல் இன்றுவரை தளராது ஈடுபட்டுளளார்.

சிறுகதைகள், மேடை, வானொலி நாடகங்கள், சித்திரங்கள் என்று பலவற்றை இவர் படைத்துள்ளார். மட் / தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும், மாவட்ட கலாசாரப் பேரவை உறுப்பினராகவும், இந்து இளைஞர் மன்ற செயற்குழு உறுப்பினராகவும், மட்டக்களப்பு நூல் நிலைய உறுப்பினராகவும், சாகித்திய மண்டல நாடகக் குழு உறுப்பினராகவும், பல கலை விழாக்கள், கருத்தரங்குகள், விமர்சன அரங்குகள், வெளியீட்டு விழாக்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பவராகவும் பல்வேறு பணிகளைப் பாராட்டும் வண்ணம் புரிந்துள்ளார். அரச உயர் அதிகாரியாக இருந்தும் ஆடம்பரமற்ற அந்த எளிமை, எல்லோருடனும் இயைந்து பழகும் தன்மை, கலகலப்பான சுபாவம் அவருக்கே




— மலர்வேந்தன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய தனித்தன்மையாகும். ''அன்புமணி அண்ணனா? ஆஹா! நல்ல மனிதர்'' என்று அறிந்தோர் அனைவரும் மனந்திறந்து பாராட்டும்படியான பண்பாளர். தொண்டனின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். இத்தகைய வல்லவரை, நல்லவரைத் தொண்டன் வாசகர்களுக்காகப் பேட்டி கண்டு, நமக்குப் பெருமை சேர்த்துக்கொண் டோம்.

● கிழக்கிலங்கையின் இலக்கிய முயற்சிகளிலே பிரதான பங்காளியாக இருக்கின்ற தங்களை, கிழக்கிலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு மாத சஞ்சிகையான தொண்டனின் சார்பாகப் பேட்டி காண்பதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். வாசகர்களுக்கு உங்களை அறிமுகப்படுத்துங்களேன்.

○ என்னைப்பற்றிச் சொல்வதனால் நான் 1953ம் ஆண்டுகளிலிருந்து எழுதத் தொடங்கியவன். அந்தக் காலத்தில் கல்கி போன்றவர்களுடைய புத்தகங்களை நிறைய வாசித்ததனால் ஏற்பட்ட தாக்கம் எழுத வேண்டுமென்ற உந்துதலை ஏற்படுத்தியது. அதன் விளைவாக நான் எழுதிய முதல் சிறுகதை ''கிராமபோன் காதல்'' என்பது கல்கியிலேயே இது வெளியானது. தொடர்ந்து நான் எழுதிய சில கதைகள் கல்கியிலே வெளியாகின. அதன் பின்னர் இலங்கைப் பத்திரிகை களான வீரகேசரி, தினகரன், சுதந்திரன், மற்றும் சஞ்சிகைகள் பலவற்றிலும் சிறுகதைகள் எழுதி வந்திருக்கிறேன். அண்மைக்காலமாக இலக்கியக் கட்டுரை களையும் எழுதி வருகின்றேன். ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண் டும். 1970, 71ம் ஆண்டுகளிலே நமது பகுதி முழுவதிலுமே ஓர் இலக்கிய விழிப் புணர்வு இருந்தது. அந்தக் கட்டத்திலே மட்டக்களப்பில் இருந்து தரமான ஓர் இலக்கிய ஏடாக ''மலர்'' என்றதொரு சஞ்சிகையை ஆரம்பித்து வெளியிட் டோம். அது பொதுவாகவே ஈழமெங்கிலுமுள்ள வாசகர்கள் மத்தியிலே ஒரு நல்ல மதிப்பைப் பெற்றிருந்தது.

அடுத்ததாகக் கலை இலக்கியங்கள் தொடர்பாக மட்டக்களப்பு கலா சாரப் பேரவை ஆதரவில் இடம்பெற்ற பல நிகழ்ச்சிகளில் – குறிப்பாக திரு. பாக்கியநாயகம் அவர்கள் செயலாளராக இருந்த காலத்தில் நானும் என்னை அதனோடு சம்பந்தப்படுத்தி பல பங்களிப்புச் செய்திருக்கின்றேன். மற்றும் எனது நாடகங்கள் பல வானொலியில் ஒலிபரப்பாகி இருக்கின்றன. பொதுவாக இலக் கிய முயற்சிகள் என்றால் ஒரு தனிப் பிரியத்துடன் ஈடுபடுவது என்னுடைய இயல்பு.

(இவ்வாறு தமது இலக்கியப் பணிகள்பற்றி விரிவாகவே அறிமுகப்படுத்தி னார். இந்தியச் சஞ்சிகைகளில் தமது படைப்புக்கள் வெளிவந்தால் அதைப் பெரிய கௌரவமாக மதித்துப் பெருமிதம் அடையும் பலர் இருக்கும் இக்காலத் தில் முதல் படைப்பே தமிழ் நாட்டு சஞ்சிகை ஒன்றில் வெளிவந்தது எனில் அன்புமணி அவர்கள் அதிர்ஷ்டசாலிதானே?)

● சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்று குறிக்கப்பட்ட தாங்கள் அண்மைக் காலத்தில் அதிகமாகக் கட்டுரைகளைத்தானே எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?

○ ஆரம்பத்தில் சிறுகதைகளில் ஒரு கவர்ச்சி இருந்த காரணத்தினால் அதிலே முடிந்த அளவு என்னுடைய அனுபவத்தை, அல்லது கண்டு கேட்டு அனுபவித் ததை மக்களுக்குச் சொல்லவேண்டும் என்ற ஒரு முனைப்பினால் சிறுகதைகளைத் தொடர்ந்து தீவிரமாக எழுதி வந்தேன். பின்னர் எனக்கொரு எண்ணம் உண் டானது. ஏனைய மாவட்டங்களில் நடப்பதுபோல் நம்முடைய மாவட்டத்து நிகழ்ச்சிகள்பற்றியும் வெளி உலகுக்குத் தெரியக்கூடிய வகையில் ஏதாவது ஒரு வகைப் பதிவு இருந்தால்தான் எதிர்காலச் சந்ததியினருக்கு அது பயன்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நோக்கத்தில், மட்டக்களப்புப் பகுதியிலே மறைந்து கிடக்கின்ற பல விஷயங்களை உதாரணமாகக் கிராமியக் கலைகள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், புலவர்கள், நாடக முயற்சிகள், இன்னோரன்ன விஷயங்களை வெளிப்படுத்தும் விதத்தில் அண்மைக் காலமாக இலக்கியக் கட்டுரைகளை எழுதி வருகின்றேன். மட்டக்களப்பிலே மறைந்து கிடக்கின்ற பல சங்கதிகள் பழமை வாய்ந்தவை. அவை எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு பதிவாக அமையவேண்டும். இந்த நோக்கத்தில்தான் இப்போது கட்டுரைகளை எழுதிக்கொண்டு வருகிறேன்.

● இந்தக் கட்டுரைபற்றி இன்னுமொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். பொதுவாக கட்டுரை எழுதுபவர்கள் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாக இருப்பதில்லை. சிறுகதை எழுதுபவர்கள் நல்ல கட்டுரையாளர்களாக இருப்பதில்லை. இரண்டு துறையிலுமே ஈடுபட்டுள்ள தாங்கள் இவை இரண்டிற்கும் உள்ள தனித்தன்மைகள் பற்றிச் சொல்லமுடியுமா?

○ சிறுகதை எழுதும்போது அது ஒரு கலைப் படைப்பு. ஆகவே சிறுகதைக்கு உரிய இலட்சணங்கள் என்ன என்ற உணர்வோடு எழுதும்போது இயல்பாகவே அது நல்ல சிறுகதையாவே அமைந்துவிடும். இலக்கிய விஷயங்கள் இதயத்தோடு சம்பந்தப்பட்டவை. உணர்வோடு சம்பந்தப்பட்டவை. அந்தவகையில் கதைகள் அமையும்போது அவை சிறப்பாக அமைகின்றன. கட்டுரைகள் எழுதும்போது அவை முற்றும் முழுதாக வேறொரு பின்னணி அதிலே நாங்கள் தகவல்களை அறிவதும், அதைப் பகுப்பாய்வு செய்வதும், அந்தத் தகவல்களினூடே புதைந்து கிடக்கும் உண்மைகளைக் கண்டறிந்து அவைபற்றிய விமர்சனங்களை வெளியிடுவதுமாகத்தான் கட்டுரைகள் அமைய வேண்டும். ஆகவே இரண்டும் வெவ்வேறு துறைகள். இரண்டுக்கும் தனித்தனியாக நமது மனதை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(தெளிவான அவரது பதிலைக் கேட்ட நாம் சிறுகதை பற்றிய மேலும் ஒரு வினாவை விடுத்தோம். இன்று பலரும் சிறுகதை எழுதுகிறார்கள். தரம் எப்படியோ, ஆர்வம் வளர்ந்திருக்கிறது. அதுபோல் சிறுகதைகளைப் படிப்போர் தொகையும் வளர்ந்திருக்கிறது. பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருப்பதால் இதை எம்மால் உறுதியாகச் சொல்ல முடிகிறது. ஆகவே இவர்கள் பயன்பெற ஒரு நல்ல சிறுகதைக்கு இலக்கணம் என்னவென்று வினவினோம்.)

○ ஒரு நல்ல சிறுகதை என்பது ஓர் எழுத்தாளனுடைய இதயத்திலே எதிரொலிக்கின்ற ஒரு சிறு சம்பவமாக அமையும். அந்தச் சம்பவத்தினால் பாதிப்படைந்த எழுத்தாளன் தான் அனுபவித்த அதே உணர்வை மற்றவர்களிடம் ஏற்படுத்தக் கூடிய அளவிலே அந்தச் சிறு சம்பவத்தை மட்டுமே பொதிந்து - ஒரு விலை மதிப்பில்லாத முத்து எப்படி ஒரு தங்க ஆபரணத்தில் பொதிந்திருக்குமோ அப்படி கலைப் படைப்பாக்கிச் சமர்ப்பிக்க வேண்டும். அந்தக் கதையிலே கலைப் படைப்பின் கலை அம்சங்கள் இருக்க வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக அந்தக் கதையின்மூலம் மக்களுக்குச் சொல்லப்படுகின்ற செய்தி நுட்பமாகப் பொதிந்திருக்க வேண்டும். அது ஒரு நல்ல சிறுகதையாக அமையும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

(இவ்வாறு அவர் சிறுகதைக்கு விளக்கம் அளித்தபோது அதை இன்னும் ஆழப்படுத்த எண்ணினோம்.)

● ஒரு படைப்பாளியின் - படைப்பின் வெற்றி எதிலே தங்கியுள்ளது? நீங்கள் கூறியது போன்ற ஒரு நல்ல படைப்பை வாசகர்கள் ஏற்றுக்கொண்டு வாசிப்பதிலா? அல்லது விமர்சனங்கள் கொடுக்கும் பாராட்டுதல்களிலா? பல வேளைகளில் இவை இரண்டுமே முரண்படுகிறதே! ஜனரஞ்சக எழுத்தாளர்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகிறவர்கள் எழுதும் கதைகளைப் பெருவாரியான மக்கள் வாங்கி வாசிக்கிறார்கள். ஆனால் விமர்சகர்கள் அவற்றை ''மலிவுக் கதைகள்'' என்று ஒதுக்கிவிடுகிறார்கள். விமர்சகர்கள் புகழ்ந்து பாராட்டும் கதைகளைப் ''புரியாத கதைகள்'' என்று சாதாரண வாசகர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். இந்த நிலையில் ஒரு படைப்பாளியின் வெற்றி எதிலே தங்கி உள்ளது?

O கதைகள் எவ்வாறு எழுதப்பட்டாலும் ஒரு சிறந்த சிறுகதை என்பது படிக்கின்ற வாசகனை முதலில் ஈர்க்கவேண்டும். எழுத்தாளன் சொல்லுகின்ற கருத்து அவன் மனதிலே மறைமுகமாய்ப் பதியவேண்டும். இவை இரண்டும் இடம் பெறாவிட்டால் அந்தக் கதை எழுதியதன் நோக்கம் இல்லாமற் போய்விடுகிறது.

ஒரு படைப்பு எந்த வடிவில் அமைந்திதாலும் – அதற்கு வரைவிலக்கணங்கள் இருக்கலாம். அது வேறு விடயம். – ஒரு புதுமையான கருத்து இருக்க வேண்டும். அதைச் சொல்லுகின்ற முறையில் ஒரு புதுமை இருக்கவேண்டும். சொல்லுகின்ற பாணியிலே ஒரு விறுவிறுப்புத் தன்மை இருந்தால்தான் வாசகர்கள் தொடர்ந்து படிப்பார்கள். இந்த மூன்று அம்சங்களும் இணையவேண்டும். இவை தவிர விமசகர்கள் சிலாகிக்கிறார்கள் என்பதற்காக தன்னுடைய நடையை மறந்து அல்லது இன்னொரு பிரபல எழுத்தாளருடைய நடையைப் பின்பற்றி எழுதும்பொழுது அது செயற்கைப் படைப்பாக அமையும். எப்பொழுதுமே ரசனை என்பது – அது விமர்சகர்களாக இருந்தால்கூட அவர்களுடைய அபிப்பிராயமாக மாறப்பார்க்கிறது. உதாரணமாக ஒன்று கூறலாம். ''மொடன் ஆர்ட்'' என்று கூறப்படுகின்ற கலையை பலர் இரசிக்கிறார்கள். அதை இரசிக்கிறவர்கள் தொகை மிகக்குறைவு. தொகை குறைவாக இருந்தாலும் அவர்களது கொள்கைப்படி அது உயர்ந்த இரசனை, உயர்ந்த படைப்பு என்பது எண்ணம். சாதாரண இரசிகர்கள் புரிந்துகொள்ள முடியாத, கைக்கு அடக்கமான சிறு குழுவினர் மட்டுமே ரசிக்கும் ஒரு விடயத்தை அது எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் பொது மக்களுக்குப் பயன்தரக்கூடிய படைப்பென்று கூற முடியாது. அதுபோலவே கவிதை, சிறுகதை, நாவல்கள் முதலியவற்றிலும் உயர்ந்த இரசனை என்று கூறிக்கொண்டு புரியாத மாதிரி எழுதுவதைவிட சராசரி வாசகனைச் சென்றடையக்கூடிய வகையில் சில கருத்துக்களை கலையம்சத்துடன் படைப்பதுதான் பொது மக்களுக்குப் பயன் தரக்கூடியது என்று எண்ணுகிறேன்.

(இடையில் குறுக்கிட்ட நாம் சராசரி வாசகன் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளுகிறானோ அதுதான் அந்தப் படைப்பின் வெற்றி என்று சொல்கிறீர்களா? என்று வினவினோம்.)

O இல்லையில்லை! எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதல்ல, நாங்கள் எழுதுவதைச் சராசரி வாசகன் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே அதன் அமைப்பு இருக்க வேண்டும். ஆனால் நாங்கள் சொல்லுகின்ற விஷயம் மானிடத்தின் விழுமியங்களை வற்புறுத்துவதாக, மானிட சமுதாயத்தை மேம்படுத்துவதாக அமையவேண்டும். இவை இரண்டையும் வெற்றிகரமாகச் செய்வதில்தான் எழுத்தாளனுடைய வெற்றி தங்கியுள்ளது. அதாவது வாசகன் எதை விரும்ப வேண்டுமோ அதை அவன் விரும்புகின்ற மாதிரிச் சொல்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

(இது ஒரு சிந்திக்கத்தக்க ஆழமான கருத்து என்று பாராட்டிக்கொண்டு தொடர்ந்தோம்.)

● மட்டக்களப்புப் பிரதேச இலக்கிய முயற்சிகளில் இரண்டறக் கலந்துள்ள தாங்கள் ஒரு கால வரையறையை வைத்து மதிப்பீடு ஒன்றைத் தருவீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இலக்கிய முயற்சிகள்பற்றி மட்டும் கூறுவதாயின் அது மிகக் குறைவாகத்தான் அமையும். நாவல் துறையை மட்டும் எடுத்துக்கொண்டால் முதலாவது நாவல் ''அரங்கநாயகி'' என்பது. இது 1935ம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. இது ஏரம்பமூர்த்தி என்பவர் எழுதியது. அதன் பின்னர் பல வருடங்களாக எழுதப் படவில்லை. கடந்த இரண்டொரு ஆண்டுகளில்தான் இரண்டு, மூன்று நாவல் கள் வெளிவந்திருக்கின்றன. ஆகவே நாவல் துறை மிகவும் நலிந்தே உள்ளது. செய்யுள் நூல்களை எடுத்துக்கொண்டால் அவை பெரும்பாலும் பண்டிதர், வித்துவான், புலவர்கள் எழுதியவை. அவைகளை ஆக்க இலக்கியங்கள் என்று சொல்லமுடியாமல் ஓரளவு சமயச்சார்பு உடையதாய் உள்ளன. அவ்வகையிலும் நாம் இன்று பார்ப்பது போன்ற கவிதைத் தொகுதிகள் மிகக் குறைவாகத்தான் வெளிவந்திருக்கின்றன. அதுபோலவே நாடகங்களும் நிறைய அரங்கேற்றப் பட்டிருந்தாலும்கூட நூல் வடிவில் வெளிவந்தவை மிகக் குறைவு. சுருக்கமாகச் சொல்லப்போனால் இங்கே மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் அதிகம். ஆனால் பதிவாகின்றவை மிகவும் சொற்பம். இதனால்தான் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைபெறும் சகல இலக்கிய முயற்சிகள் பற்றியும் வெளி உலகம் அறிந்துகொள்ள முடிவதில்லை. இதை நாங்கள் நிவர்த்தி செய்வதானால் வெளிவந்த படைப் புக்கள் கூடிய அளவு நூலுருவில் வெளிவரவேண்டும். அது வெளி மாவட்ட வாசகர்களை, விமர்சகர்களை சென்றடையவேண்டும். அதன் பின்புதான் மட்டக் களப்புப் பிரதேச இலக்கிய முயற்சிகள் பற்றிய ஒரு முறையான மதிப்பீடு வரும் என்று எண்ணுகிறேன். பத்திரிகையிலே வருகின்ற படைப்புக்களைக் கொண்டு நமது மத்தியிலே சிறந்த எழுத்தாளர்கள், சிறந்த கவிஞர்கள் நாவலாசிரியர்கள் கூட இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

● ''மலர்'' என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிட்டதாக முன்பு குறிப்பிட்டீர்கள். அந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்களேன்.

○ அது ஒரு நல்ல அனுபவம் என்றுதான் சொல்லவேண்டும். 'மலர்' சஞ்சிகையை நான் ஆரம்பித்தபொழுது ஏற்கனவே நமது பகுதியிலே மட்டுமல்ல ஈழத்தின் பிற பாகங்களிலும் என்னையும்விட பிரபலமானவர்கள், எழுத்துத் துறையிலே தோய்ந்தவர்கள சஞ்சிகைகளை ஆரம்பித்துத் தோல்வி கண்ட நிலை. இருந்த போதும் அப்போது நான் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டிருந் தேன். கல்வித் திணைக்கள நண்பர்கள் சிலரையும் சேர்த்துக்கொண்டு எப்போதும் வெளிவராத அளவு இலக்கியத் தரமாகவும், அதே நேரத்தில் சராசரி வாசகனைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலும் அந்தச் சஞ்சிகையை நடாத்தி வந்தேன். இது எனது மனதிலே நீண்ட காலமாகவே இருந்து வந்த விடயம். ஒரு நல்ல சஞ்சிகையை வெளியிட்டுப் பார்க்க வேண்டும், வாசகர்களுக்கு கொடுக்க வேண் டும் என்பது நிறைந்த உழைப்பு, மிகுந்த செலவு, மிகுந்த பிரயாசை. இரண்டு வருடங்கள்தான் அந்தச் சஞ்சிகையை நடாத்த முடிந்தது. பின்னர் ஏனை யோரைப்போலவே நானும் கைவிடவேண்டி வந்தது. அதற்கு முக்கிய காரணம் எப்போதுமே நாங்கள் எவ்வளவு சிரமப்பட்டுச் செய்தாலும் வாசகர்கள் தமிழகத் திலிருந்து வரும் கவர்ச்சிகரமான சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டுத்தான் வாங்குகிறார் கள். விலையாக இருந்தாலும் சரி, தரமாக இருந்தாலும் சரி. அந்த அளவு போட்டி போடுகின்ற அளவுக்கு சிறிய சஞ்சிகைகளை நடாத்த முடியாது. உதா ரணமாக 'தீபம்' என்ற சஞ்சிகையை திரு. பார்த்தசாரதி அவர்கள் நடாத்தி னார்கள். மிகவும் சிறந்த எழுத்தாளர். அவராலேயே நடாத்த முடியாமல் போய்விட்டது. எப்போதுமே இலக்கிய சஞ்சிகைகளுக்கு சிறிய சஞ்சிகைகளுக்கு ஆதரவு குறைவு. மிகவும் கஷ்டப்பட்டுத்தான் நடத்தவேண்டிருக்கிறது. அந்த 70, 71ம் ஆண்டுகளிலே இப்போதிருப்பதைவிட செலவுகள் சுருக்கமாக இருந்தா லும் சஞ்சிகை வெளியிடுவதில் உள்ள கஷ்டங்கள், வாசகர்கள், விநியோகஸ்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு அனுப்பிப் பணத்தைப் பெறுகின்ற கஷ்டங்கள் அதிகமாக இருந்தன. அதுபோலவே விளம்பரம் சேர்த்து வருமானத்தைப் பெருக்குவது முயற்கொம்பாக இருந்தது. அதனால்தான் தொடர்ந்து அந்த முயற்சி நடைபெற முடியவில்லை. அந்தப் பின்னணியில் பார்க்கும்போதுதான் தொண்டன் போன்ற சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருவது எனக்கு மிகுந்த திருப்தியைத் தருகிறது.

● நல்லது, இதனோடு தொடர்புகொண்ட இன்னுமொரு வினாவை விடுக்க விரும்புகிறேன். சஞ்சிகைகள், வார ஏடுகள் போன்ற தொடர் வெயீட்டு முயற்சிகள் கிழக்குப் பகுதியில் எப்போதும் தோல்வி அடைந்து வந்திருப்பதே வரலாறு; அதேவேளை வட பகுதியில் நாளேடுகள், வார ஏடுகள், மாத சஞ்சிகைகள் என்று தொடர்ந்து பல வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தியச் சஞ்சிகையின் வருகைக்கு மத்தியிலும்தான் இவைகள் வந்து கொண்டிருக்கின்றன. கிழக்குப் பகுதியில் மட்டும் இது தோல்வி அடைய என்ன காரணம்? இதை மாற்றியமைக்க என்ன செய்யலாம்?

○ முக்கியமான காரணம் படித்தவர்கள் மத்தியிலே இது நமது பகுதியிலிருந்து வருகின்ற சஞ்சிகை என்ற அபிமானம் இல்லாமலிருப்பது. யாழ்ப்பாணத்திலோ ஒரு சிங்கள சகோதரர் மத்தியிலே, ஓர் ஏடு வெளிவந்தால் அபிமானம் காரணமாகப் பலர் அதை வாங்குகிறார்கள். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். அவ்வாறான நிலை மட்டக்களப்பில் இல்லை என்பதுபோல் எமக்குப் படுகிறது. ஏனெனில் நாம் ஒரு தினசரியோ, வார சஞ்சிகையோ, மாத சஞ்சிகையோ வெளியிட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படித்தவர்கள் - சாதாரணமாக கல்கி, ஆனந்த விகடன் படிக்கின்ற வாசகர்கள், இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் வாங்கினால் மட்டுமே பல ஆயிரம் பிரதிகளை விற்கக்கூடியதாயிருக்கும். நிலைமை என்னவென்றால் இங்கு ஆயிரம் பிரதிகளைப் பிரசுரித்தால் சில நூறு பிரதிகளைகூட விற்க முடிவதில்லை. அந்தச் சில நூறு பிரதிகளைக்கூட நாம் வீட்டு வாயில்களுக்குச் சென்று கெஞ்சித்தான் விற்கவேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் வாசகர்கள், படித்தவர்கள் என்று கூறுகின்றபொழுது சாதாரணமாக ஆசிரியர்கள், உத்தியோகம் பார்க்கின்றவர்கள், இலக்கிய ஈடுபாடு உடையவர்கள் நமது பகுதிகளிலிருந்து வருகின்ற இலக்கிய ஏடுகளைப் பணம் கொடுத்து வாங்கவேண்டும். அது முக்கியம். அடுத்து பத்திரிகைகளை வாங்கி, விற்று ஒழுங்காகப் பணத்தைக் கொடுக்கின்ற விநியோகஸ்தர்கள் இருக்கவேண்டும். ஆக, வாசகர்களின் அபிமானம் வேண்டும். வாசகர் மத்தியில் விநியோகித்துப் பணத்தை ஒழுங்காக அனுப்புகின்ற விநியோகஸ்தர்களும் வேண்டும். இவை இரண்டுமிருந்தால் பத்திரிகைகளை ஓரளவு விற்கக்கூடியதாக இருக்கும்.

● சரி நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் நாம் நீண்ட காலமாக இதைத்தான் சொல்லி வருகின்றோம். ஆனால் எங்கள் வாசகர்களின் வாசிப்பு உணர்வை, எங்கள் வெளியீடுகளை நாம் பணம் கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவதற்கு நாம் எத்தகைய ஆக்க முயற்சிகளை, கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளலாம்?

○ இது ஒரு கஷ்டமான கேள்வி. வாசகர்களை மறைமுகமாக ஊக்குவிக்க வேண்டுமென்றுதான் சஞ்சிகைகளிலே போட்டி வைப்பார்கள், உற்சாகத்தைத் தூண்டக்கூடிய வகையிலே பரிசு கொடுப்பார்கள். இவை எல்லாம் செய்தும்கூட நமது மாவட்டத்திலே அவை பயன் தரவில்லை இதற்கு மேலாக என்ன செய்யலாம் என்று எனக்குக்கூடப் புரியவில்லை. ஆகையினால் திட்டவட்டமாக என்னால் ஒன்றும் கூற முடியவில்லை. தொடர்ந்து சஞ்சிகைகளை வெளியிடவேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அது வாசகர் மத்தியிலே பழகி வாசகர் தாமாகவே வாங்கும் நிலை ஏற்பட வேண்டும். உதாரணமாகக் கூறுவதாயின் யாழ்ப்பாணத்திலே மல்லிகையைக் கூறலாம். தொடர்ந்து ஒரு சஞ்சிகை வரும்போது அதற்கு வாசகர்கள் பழக்கப்பட்டுவிடுவார்கள். தொடர்ந்து விற்பனை அதிகரிக்குமென்று நம்புகிறேன்.

(வாசகர் பழகப் பல ஆண்டுகள் ஆகுமே! அது வரையில் ஏற்படும் பாரிய செலவை யார் தலையில் சுமப்பதாம் என்று எண்ணிக்கொண்டோம்.)

● மட்டக்களப்பு மாவட்டத்திலே அரசாங்க ஆதரவோடு இயங்கிவரும் கலாசாரப் பேரவை என்று ஒன்று இருக்கிறதே! அப்படி ஒன்று இருப்பதே பலருக்குத் தெரியாத விஷயம். அதனோடு தொடர்பும் பொறுப்பும் உள்ளவர் என்ற வகையில் அதன் இயக்கம்பற்றிச் சொல்லுங்களேன்.

○ கலாசாரப் பேரவை ஒரு காலத்தில், அதாவது திரு. தேவநேசன் நேசையா போன்றவர்கள் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் நிறைந்த பங்களிப்பைச் செய்தது. அதற்குக் காரணம் அந்தக் காலத்து நிலைமை ஓரளவு சுமுகமாக இருந்ததென்று கூறுவார்கள். இப்பொழுது கலாசாரப் பேரவையை நிர்வகிக்கின்ற பொறுப்பு எனக்கு இருந்தும்கூட நாங்கள் திட்டமிடுகின்றபடி பல வேலைகள் செய்ய முடிவதில்லை. தை மாதத்தில் நிறையத் திட்டங்களைத் தயாரித்தோம். இலக்கிய நூல்களை வெளியிடுவது, கட்டுரைகளைச் சேகரிப்பது, நாடக ஆசிரியர்களுடைய விபரங்களைச் சேகரித்து வெளியிடுவது போன்ற பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் எங்களுக்கு மத்திய அரசால் கிடைத்து வந்த நிதி மிகவும் குறைவு. பொதுமக்கள் மத்தியில் நிதியைத் திரட்டலாமென்றால் அதற்குரிய சூழ்நிலை இருக்கவில்லை. ஆக, நிறையத் திட்டங்கள், எண்ணங்கள் இருந்தாலும் அதைச் செயற்படுத்தக்கூடிய வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. இருந்தாலும் அண்மைக்காலமாக ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நிதி சிறிது கூட கிடைக்கும்போலிருக்கின்ற காரணத்தினால் சில திட்டங்களைக் கொண்டிருக்கிறோம். நிலைமையைப் பார்த்துத்தான் செய்யமுடியும். மாதாந்தம் கலை நிகழ்ச்சிகள் நடத்துவது, கருத்தரங்குகள் நடாத்துவது, ஒவ்வொரு உதவி அரசாங்க பிரிவுகளிலும் கலாசாரப் போட்டிகள் நடத்தி அதிலே தெரிவாகின்ற கலை நிகழ்ச்சிகளை மட்டக்களப்பிலே நடத்துவது. இப்படி முன்னரெல்லாம் நடைபெற்றது. இவைகளை அடுத்த ஆண்டிலாவது செய்யவேண்டும் என்று எண்ணியிருக்கிறோம். இதுபோன்று முன்னரெல்லாம் கலாசாரப் பேரவை நடாத்தியிருந்தும் நீண்ட இடைவெளிகள் வந்த காரணத்தால் மறந்துவிட்டோம். இப்போதுள்ள சூழநிலையில் கலை நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கும், அவைகளில் பங்குகொள்வதற்கும் பலருக்கும் உற்சாகமில்லை. அதனால் நாமும் போட்டிகளை நடாத்தி தரமான படைப்புகளைப் பெற முடிவதில்லை. இருந்தாலும் இந்தச் சூழ்நிலையிலும் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமிருக்கிறது.

(அவரது எண்ணங்கள் செயலாகவேண்டும் என்று வாழ்த்திக் கொண்டு, இலக்கிய வாழ்வில் பெற்ற பரிசுகள், விருதுகள், பாராட்டுக்கள் என்று நெஞ்சில் ஏதும் நிலைத்திருக்கிறதா? என்று கேட்டோம்)

○ என்னுடைய முயற்சிகளுக்கு கிடைக்கின்ற சன்மானம் என்னுடைய ஆத்ம திருப்தி ஒன்றுதான். அதற்கு மேலாகச் சொல்வதானால் 1962ம் ஆண்டிலே நான் எழுதிய 'திரை கடல் தீபம்' என்ற நாடகத்திற்கு இலங்கைக் கலைக் கழகத்தின் முதலாவது பரிசு கிடைத்தது. அது ஒன்றுதான் பரிசென்று கூறக்கூடியது. அண்மையில் 'ஒரு தந்தையின் கதை' என்ற எனது நாவல் வெளிவந்தது. அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. இதுவும் மனதுக்கு நிறைவைத் தரக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. பெரும்பாலும் என்னுடைய படைப்புகளை வெளியிடுவதைவிட மற்றவர்களுடைய படைப்புகளை வெளியிட்டு, பாராட்டி, அவர்களை வளர்த்துவிடுவதிலே எனக்குப் பெரிதும் மனநிறைவு ஏற்படுகிறது.

*(அவருடைய இந்த வார்த்தைகளால் நெகிழ்ந்துபோன நாம் மனம் திறந்து சொன்னோம் உங்கள் உற்சாகப்படுத்தலால், பல இளம் எழுத்தாளர்கள் இங்கு உருவாகி இருக்கிறார்கள். மறைந்திருந்த பலர் வெளிக்கொணரப்பட்டிருக்கிறார்கள். இது உங்களுக்கு மிகவும் ஆத்ம திருப்தியைத் தருமல்லவா என்று கூறிய பொழுது "உண்மை, உண்மை" என்று ஏற்றுக்கொண்டார்.)*

● *இறுதியாகத் 'தொண்டன்' வாசகர்களுக்கு, இளைய எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

○ தொண்டன் சஞ்சிகை நீண்ட காலமாகத் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கிறது. நான் அதனுடைய நிரந்தர வாசகன். தொண்டன் இலக்கியத் துறையில் பல பகுதிகளிலும் தன்னுடைய கரங்களைப் பரப்பி வருகிறது. தொண்டன் வாசகர்கள் நிச்சயமாகத் தரமான இலக்கிய ரசனை உடையவர்களாக இருப்பார்கள் என்பது எண்ணம். தரமான இலக்கியப் படைப்புகள் அவர்களைச் சென்றடைய மேலும் தொண்டன் பணியாற்ற வேண்டும் என்பது எனது விருப்பம்.

இளைய தலைமுறையினர் வாழ்க்கையின் விழுமியங்களை நேசிக்க வேண்டும். அதை நேசிப்பதற்கு இலக்கியம் அவர்களுக்கு ஒரு பாலமாக அமையும். இலக்கியத்தினூடாக அவர்கள் இந்த நல்ல பண்புகளைப் பெறவும், வாழ்க்கையில் நல்ல வழிகளைக் கடைப்பிடிக்கவும் வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில் தொண்டன் வாசகர்கள் தொடர்ந்து தொண்டனைப் படிப்பதன்மூலம் தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*(இலக்கிய உலகில் சந்திக்க அரிதான ஒரு நல்ல மனிதரை, ஓர் இலக்கியவாதியை சந்தித்த நிறைவோடு, வணக்கம் கூறி விடை பெற்றோம்.)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க! நீ எம்மான்! நீடு

சீராரும் ஆரைநகர்த் தாயாரீன்ற
செம்மல் இரா நாகலிங்க நாம முள்ளோன்
பாரார்க்குச் சேவை செய்யும் பண்பு மிக்கோன்
பலநூல்கள் கற்ற வுயர் பண்டிதன்போல்
காராகப் பொழியும் கனசொற் பெருக்குக்
கட்டுரைக ளோடு பல நூல் களாக்கித்
தாரணியோர் தாம் படிக்கத் தந்த சேயோன்
தமிழ் மணியாம் விருதுபெற்று வாழ்க! வாழ்க!!

எப்போதும் அன்புமுகங் காட்டி நின்று
அனைவருக்கும் அன்புமணி யான ஐயா
தப்பாது தாமேற்கும் பணியை நன்கு
தளராது நிறை வேற்றும் தகைமை யாளன்
முப்போதும் பிறர்க்காகச் சேவை செய்து
முன்னவனின் அருள் பெற்ற முயற்சியுள்ளோன்
நப்பாசை கொள்ளாத நல்லோன் நீடு
நானிலத்தில் நலம் பெற்று வாழ்க! வாழ்க!!

எல்லெவரும் நல்லவரென் றேற்கும் பான்மை
எளிதாக யாவருக்கும் வந்திடாது
தொல்லுலகில் வந்துதித்தீர் தொண்டு செய்யத்
தோழமையாய் நண்பு கொண்டீர் யாவரோடும்
நல்லறிஞர் புலவர்மணி பெரியதம்பி
நவின்ற பல நூல்களையும் பரப்பி வைத்தீர்
சொல்ல வரிதே நுமது செய்கையெல்லாம்
சொற் சோராத் தமிழ்மணி நீ வாழ்க! வாழ்க!!

ஒரு தந்தை யின்கதைநூல் இயற்றி வைத்தீர்
ஒப்புடைய பலநூல்கள் வெளியிட்டுள்ளீர்
கருமமே கண்ணாகக் கல்விக் கந்தோர்க்
காரியங்கள் பலபேர்க்கு நன்மை செய்தீர்
அருமையாய் உபவரச அதிபராக
அனைவர்க்கும் அன்பு, பணி ஆற்றிநின்றீர்
தரும நெறி தவறாத தலைவ நீயும்
தமிழ்மணி யாம் தகைமைபெற்று வாழ்க! வாழ்க!!

உத்திபல தந்து நல் உபாயங் கூறி
உயர்த்தி வைத்தீர் எழுத்தாளர் தம்மை நன்கு
நத்தி வரும் நண்பர்கட்கு நலமுண்டாக்கி
நாட்டிவைத்தீர் பல்வேறு நாடகங்கள்
எத்தனைதான் செய்தாலும் இலைமறைகாய் போல
எட்டுணையும் புகழ் விரும்பா எம்மான் நீயும்
கத்துகடல் சூழுலகில் கைலைவாசன்
கருணை பெற்று நீடுழி வாழ்க! வாழ்க!!

**தமிழ்மணி சிவ. விவேகானந்தமுதலியார்.**
ஓய்வுபெற்ற அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு நாட்டுயர்வு

சகலவிதமான நுகர்ச்சிப் பொருட்களையும்
கொள்வனவு செய்ய
நாடுங்கள்

## "கூட்டுறவு வர்த்தக நிலையம்"





★ நிறைந்த திருப்தி
★ குறைந்த விலை
★ தரமான பொருட்கள்

இன்றைய சமூகத்தின் தேவைகளை உணர்ந்து
சேவையாற்றும் நிறுவனம்

## "கூட்டுறவு வர்த்தக நிலையம்"

ஆரைப்பற்றை - புதுக்குடியிருப்பு
ப. நோ. கூ. சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புமணி

1952ம் ஆண்டு முதல் எழுதி வரும் அன்புமணி கதை, கவிதை, கட்டுரை, நாவல், நாடகம், விமர்சனம், வானொலிப் பேச்சு முதலிய பல்துறைகளிலும் முத்திரை பதித்தவர். தமிழக சஞ்சிகைகளிலும், ஈழத்துப் பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

சத்தியமான இலக்கியத் தேடலுடன், கடந்த 40 வருடங்களாக இலக்கியத் துறைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட இவர் தன் நண்பர்களின் இலக்கியத் திறனை இனம்கண்டு ஊக்குவிப்பதில் சாதனை படைத்தவர். மட்டக்களப்பில் இடம்பெறும் எந்த ஒரு இலக்கிய நிகழ்விலும் இவரது மறைமுகமான பங்களிப்பு இருக்கும். மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளராக (1961–1971), ''மலர்'' ஆசிரியராக (1970–71), மாவட்டக் கலாசாரப் பேரவை நீண்ட கால உறுப்பினராக (1962 முதல்), புலவர்மணி நினைவுப் பணி மன்றத் தலைவராக (1991 முதல்), இந்து இளைஞர் மன்றச் செயற்குழு உறுப்பினராக (1970 முதல்) பல்வேறு சமய, சமூக, கலாசார, இலக்கியப் பணிகளில் காத்திரமான பங்களிப்பைச் செய்தவர் இவர்.

1952ல் கல்வித் திணைக்கள இலிகிதராக வாழ்க்கையை ஆரம்பித்து 1984ல் இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர், மட். கச்சேரி தலைமையக உதவி அரசாங்க அதிபர், வடக்கு, கிழக்கு மாகாண சபை உள்துறை உதவிச் செயலாளர் முதலிய பதவிகளை வகித்துத் தற்போது ஆளுனர் செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணிபுரிகின்றார்.

இலங்கைக் கலைக் கழக நாடகப் போட்டி முதற் பரிசு (1972), இந்து சமய, கலாசார அமைச்சின் ''தமிழ்மணி'' விருது (1972) முதலியவற்றைப் பெற்ற இவரது ஆக்கங்கள்: திரைகடல் தீபம் (நாடகம்), நமது பாதை (நாடகம்), ஒரு தந்தையின் கதை (நாவல்). இயற்பெயர்: இரா. நாகலிங்கம்.

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org